கீதாசார்யன்

லகங்கர்ய திலகம் கண்ட

பைந்தமிழ் விழா

ஸ்ரீ உ.வே. PBA ஸ்வாமியால் கைங்கரியதிலகம் எனப் போற்றப்பெற்ற ஸ்ரீ உ.வே அட்வகேட் அனந்தாசாரியார் ஸ்வாமியின் 84-வது திருநக்ஷத்ரம் மற்றும் அன்னார் அட்வகேட் தொழிலில் 50 ஆண்டுகள் நிறைபணி ஆற்றியமை ஆகியவை குறித்து விழா ஒன்று சென்னையில் ஒரு மாபெரும் மஹோத்ஸவமாக மலர்ந்தது.

இதனையொட்டி 29-10-1983 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 30-10-83 வரை ஒரே நாளில் எதிரெ அருளிச்செயல் சேவையாக நாலாயிர திவ்ய பிரபந்தம் முழுமையும் கிரமமாக அநுஸந்தானமாகியது. கோயில் திருமலை பெருமாள்கோயில் ஆழ்வார் திருநகரி, திருவல்லிக்கேணி காட்டுமன்னார்கோயில் ஸ்ரீபெரும்பூதூர் ஆகிய திவ்யதேசங்களில் இருந்து 12 அத்யாபகர்கள் எழுந்தருளி கோஷ்டியை அலங்கரித்த பாங்கு பன்னிரு ஆழ்வார்களே ஒருசேர அமர்ந்து அருளிச்செய்யும் காட்சியை கண்முன்னே நிறுத்தியது. மேலும் இம்மஹோத்ஸவத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸத்யாதி திருமலை திருப்பதி சின்னஜீயர் ஸ்வாமியும் ஸ்ரீபெரும்பூதூர் யதிராஜ ஜீயர் ஸ்வாமியும் எழுந்தருளியிருந்தது ஸ்வாமி எம்பெருமானுடனும் மணவாளமாமுனிகளுடனுமாகவே எழுந்தருளினாற் போல் அமைந்தது.

30-10-83 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நாலாயிர திவ்ய ப்ரபந்தசேவை சாற்றுமறை கிரமமாக நடைபெற்று முடிந்தது. பற்பல திவ்யதேசங்களில் இருந்து மாலை பிரஸாதங்கள் ஸ்ரீ உ.வே. வத்ஸல ஸ்வாமிக்கு பஹுமானிக்கப்பட்டன. கோஷ்டியாருக்கு விசேஷமான

(ராப்பர் 3-ம் பக்கம் பார்க்க)

கீதாசார்யன்-62

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

தொருநி 6 | ருநிரோ ஹு | கார்த்நி மீ | நவம் 83 | பருநி 2



ஆசிரியர்:

M. A. வேங்கடகிருஷ்ணன் M. A. M, Phil,

இயக்குநர் குழு :

T. C. A. ராமாநுஜம்
M.A. B.L. I.R.S. (தலைவர்)
N. கணபதி
விற்பனை இயக்குநர்
R ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்புஇயக்குநர்
P. T. ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

ஆலோசகர் குழு:

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V. ராமாநுஜம்
S. வேங்கடகிருஷ்ண
பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி
சென்னை-600 050.

திருக்குடந்தை

(சக்ரபாணி)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் மேற்கே கோயில் உள்ளது. ஊரின் நடுவே ஒரு பெரிய கோயிலில் சாரங்கபாணி எனும் எம்பெருமானும் மற்றொரு பெரிய கோயிலில் சக்ரபாணி எனும் எம்பெருமானும் எழுந்தருளியுள்ளனர். இரு கோயிலும் சேர்ந்து ஒரே திவ்யதேசமாகும்.

"சங்கவண்ணமன்னமேனி சக்ரபாணி அல்லையே" என்று திருச்சந்தவிருத்தத்தில் திருமழிசை ஆழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

அண்ணங்கராசார்ய சுவாமிகள்

அழகிய மணவாளப்பெருமாளுக்கு ஈடு வியாக்யானத்தை அருளிச்செய்து அவர்க்கு ஆசார்யஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த அழகிய மணவாளமாமுனிகள் நியமனஞ் செய்த அஷ்டதிக்கஜங்களில் ஒருவர் பிரதிவாதி பயங்கரர் என்னும் அண்ணா; அவர் திருவம்சத்தில் அவதரித்தவர் காஞ்சிபுரம் ஸ்ரீமத் உ. வே. மஹாவித்வான் அண்ணங்கராசார்ய சுவாமிகள். ஆதலால் இவர்க்குப் பிரதிவாதி பயங்கரர் என்ற பட்டமும் உண்டு. இவர், 'உலகம் புகழும் உத்தமர்' என்னும் நிலையில் வாழ்ந்துவந்தார். ''வையம் மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணுளே'' என்ற ஆழ்வார் திருவாய்மொழியின் படியே தம்முடைய வேறு பாடு தோற்ற எழுந்தருளியிருந்து, இவ்வுலகோடு கூட விண்ணுலகத்தையும் ஆண்டுவந்தார். ''விண்மீதிருப்பாய் மலை மேல் நிற்பாய்'' என்கிறபடியே விண்ணுலகத்தில்

R. வேங்கடராமானுஜன்

வீற்றிருக்கின்ற பேரருளாளனே இங்கு அத்திகிரியென்னும் மலைமேல் நிற்கின்றான். ஆகையால் இங்குத்தனக்குச் செய்து வந்த அடிமையைக் கண்டு உகந்து அங்கும் இவரை அடிமைகொள்ள வேண்டுமென்ற விருப்பத்தால் நம் ஸ்வாமியை அங்கு அழைத்துக் கொண்டான். ஆதலால் ஸ்வாமியைப்பிரிந்த துன்பத்தில் நாம் மூழ்கி நிற்கின்றோம். இப்பொழுது அவ்வுலகிலுள்ள நித்யஸூரிகளும் தானும் ஸ்வாமியோடு கூடிநின்று மகிழ்கின்றார்கள் ''மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்'' என்று முன்னமே அவன் கூறியுள்ளான். ஆதலால் ''நீர் வாரும் அங்குப் போகலாம்'' என்று அழைத்துச் சென்று விட்டான். இனி ஸ்வாமியை ஸேவிக்க விரும்பினால் அங்குப் போய்தானே ஸேவிக்க

வேண்டுமென்ற கவலையை நாம் கொள்ளவேண்டுவதில்லை; அவர் நமக்காக அர்ச்சாவடிவத்தில் இங்கு எழுந்தருளியிருக்கிறாரென நினைத்து, அவரை அர்ச்சாவடிவில் வணங்கி வருவோமாக. இது, எம்பெருமானார் நமக்குக் காட்டிக் கொடுத்த வழியாகும்.

ஸ்வாமியின் பெருமைகளைப்பற்றி யார்யார் எவ்வளவு பேசினாலும் பேசிமுடிக்கவியலாது. கூடிக்கூடி அங்கங்குப் பேசி வருகிறார்கள்; இவருடைய பெருமையினை எழுதிஎழுதிக் குவிக்கின்றார்கள் பலர். எவ்வளவு பேசினாலும் இவருடைய பெருமையப் பேசிமுடிக்க வியலாதென்பது உறுதி. எம்பெருமானாரைப் போலவும் அழகிய மணவாள மாமுனிவரைப் போலவும் நம் ஸ்வாமியும் இவ்வுலகம் நிறைந்த புகழைப் பெற்றுவிட்டார். ஆதலால் இவரை பூர்வாசார்ய கோஷ்டியில் வைத்துத்தான் எண்ண வேண்டும். இவருடைய சலியாத ஞானமும் ஆசார்ய பக்தியும் இவரைக் குணக்குன்றாக்கிவிட்டன! குணமென்னும் குன்றேறி நின்றார் என்று ஞானிகளைக் கூறுகிறார் திருவள்ளுவர். "கருணைக்குக் கடலான வரிவர் ஸத்ஸம்ப்ரதாயஸித்தர், ஸகலசாஸ்த்ர நிபுணர், பரம தயாளுக்கள்" என்று பூர்வாசார்யர்களைப் போற்றியுரைக்கின்றார் மணவாளமாமுனிகள். ஸ்ரீவசனபூஷணவியாக்யான அவதாரிகையில் இதனைக் காணலாம். நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தில் உபாயத்தை நிர்ணயிக்குமிடத்து, 'பக்தி உபாயமாகாது ஸ்வஸ்வாதந்த்ர்ய பயமுள்ளவனுக்கு' என்றும், 'ப்ரபத்தியும் உபாயமாகாது பகவத் ஸ்வாதந்த்ர்ய பயமுள்ளவனுக்கு' என்றும், 'ஆசார்யனைத் தான்பற்றுகிற பற்றும் உபாயமாகாது அஹங்காரமுடைத்தாகையாலே' என்றும் அருளிச்செய்து முடிவில் 'உத்தாரகம் ஆசார்யாபிமானமே" என்று நிர்ணயித்து அருளிச்செய்து முடிக்கின்றார் பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசனபூஷணமாகிற திவ்யசாஸ்த்ரத்தில்

ஆசார்யாபிமானமாவது-ஆசார்யன் 'இவன் நம்முடையவன்' என்று விரும்பியிருத்தலாம். இந்த அபிமானமே உய்வதற்கு உபாயம் என்பது இதன் பொருள். இதுவே இந்த சாஸ்திரத்தின் கருத்து.

இதனை உஜ்ஜீவனோபாயமாகக் கூறுவது என்கொண்டு என்னும் கேள்வி உதிக்கும் அதனால், "இது என்னுடைய ஆசார்யவசனத்தாலே" என்று தெரிவித்துக்கொள்ளுகிறார். "ஸ்வாபிமானத்தாலே ஈச்வராபிமானத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமான மொழியதநியில்லே" யென்று பிள்ளைபலகாலும் அருளிச்செய்யக் கேட்டியிருக்கையாயிருக்கும்" என்னும் ஸூத்ரத்தில்; இங்குப் பிள்ளை யென்றது தம்முடைய ஆசார்யரான திருக்குருகைப்பிரான் பிள்ளானை; 'அவர் பலதடவைகளில் அருளிச்செய்யக் கேட்டிருக்கிறேன்' என்றதனால் இது முக்யமான பிரமாணமென்று தெரிவித்தருளினராயிற்று. ஸ்வாபிமானம் என்பது 'நானே எனக்கு ரக்ஷகன்' என்றிருப்பதாம். இது, 'இவன் என்னுடையவன் இவனுக்குள்ள ரக்ஷணை காரியத்தைச் செய்கை என்பொறுப்பு என்று இருக்கும் ஈச்வரன் இவன் விஷயமாகப் பண்ணும் ரக்ஷணைபிமானத்தைக் குலைத்துவிடும். ஆதலால், ஆசார்யாபிமானமொழிய இவனுக்கு வேறு உபாயமில்லே' யென்று அருளிச்செய்வர் என்று தெரிவித்திருக்கிறார். இங்கே நம்பிள்ளையின் பெருமை தோன்ற அருளிச்செய்திருக்கிறார் மணவாளமாமுனிகள் "ஸகலசாஸ்தர ஸாரவிதக்ரேஸரரான —ஸகலசாஸ்த்ரங்களின் ஸாரத்தையறிந்தவர்களில் முன்செல்லுமவரான— நம்பிள்ளை திருவடிகளிலே பழுக்க லேவித்து, தத்தேக பரதந்த்ரராய் ஸகலசாஸ்த்ரதாத்பர்யங்களையும் அவரருளிச் செய்யக்கேட்டு தந்நிஷ்டராயிருக்கும் நம்முடைய ஆசார்யரான பிள்ளை (வடக்குவீதிப்பிள்ளை) தஞ்சமாகப் பலகாலும் அருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும் என்றபடி." என்பது இங்கே காணும் மணவாளமாமுனி

களின் உரவளம். இதனால் இவர் தம்முடைய ஆசார்ய வசனத்தை சிறந்த பிரமாணமாகக் காட்டியிருப்பதைக் காணலாம். அடிக்கடி கூறுவது அதில் ஆதரந்தோற்ற வாகும்.

அவதாரிகையில் "ஸகலம்ப்ரதாயஸித்தர், ஸகல சாஸ்த்ர நிபுணர், பரமதயாளுக்கள்" என்று மணவாளமா முனிகள் அருளியிருப்பது முக்கியமாக நம்பிள்ளையைப் பற்றியும் அருளியிருப்பதாகத் தெரிகிறது. 'ஸகலம்ப்ர தாயஸித்தர்' என்றால், 'ஆசார்யர்களுடைய உபதேசபரம் பரையில் வரப் பெற்ற ஞானமும் அதன்படி நிஷ்டையு முடையவர்கள்' என்று பொருளாம். இந்நிலையிலுள்ளவர் நம் ஸ்வாமியென்பது வெளிப்படையான விஷயம். 'ஸகல சாஸ்த்ர நிபுணர்' என்றால், 'வேதம் முதலான சாஸ்த்ரங் களில் தெளிவான ஞானமும் அதனைப் பிறர்க்கு எடுத்துரைப் பதிலும் அவற்றின் கருத்துக்களை நூல்களாக்கித் தரு வதிலும் வல்லுநர்' என்று பொருளாம். நம் ஸ்வாமி கற் காதவையான வேதங்களோ ஸ்ம்ருதிகளோ இதிஹாஸங் களோ புராணங்களோ அருளிச் செயல்களோ ஸ்தோத்ரங் களோ ஒன்றுமே இல்லை; அவையெல்லாவற்றையும் முழுதும் கற்றவர். அவற்றை பிறர்க்கு எடுத்துரைப்பதிலும் அவற்றின் கருத்துக்களை எடுத்து எழுதுவதிலும் பேராற்றல் வாய்ந்தவர் என்பதை நம்ஸ்வாமியினுடைய உபந்யாஸங் களாலும் வியாக்யான க்ரந்தங்களாலும் அறிகின்றோம். ஸாதாரணமாக ஆசார்யர்களை பகவானுடைய அவதார விசேஷமாக சாஸ்த்ரம் கூறுகின்றது. "தேனுர் கமலத்திரு மாமகள் கொழுநன் தானே குருவாகி" என்ற ஞான ஸார வசனத்தை இங்கே நினைவிற் கொள்ளலாம். அப்படியிருப் பினும், நம்ஸ்வாமியை 'ஹ்ரிவிசேஷாவதாரம்' என்றுதான் கூறவேண்டும். நம்பிள்ளையினுடைய அம்சாவதார மென்று கூறினால் அது மிகையாகாது. ஸ்வாமி அருளிச் செய்த "திவ்யார்த்ததீபிகை" ஒன்றே இவருடைய பெருமை

னங்குவதற்கு ஏதுவாக எடுத்துக்காட்டாக அமையும். ஸாதாரணமாக எல்லாருடைய கையிலும் இவ்யார்த்த தீபிகையில்லாமல் இருப்பது இல்லை. இவர் அருளிச் செய்த ஸ்தோத்ர வியாக்யானங்களால் பலரும் பயன் பெற்றுள்ளார்கள். ஆதலால், ஸ்வாமியை 'ஸகல சாஸ்த்ர நிபுணர் 'பரமதயாளு' என்று கூறிக் கொண்டால் மிகமிகப் பொருந்துமென்பது அடியேன் கருத்து. இப்படிப் பட்ட மஹான் உலகத்தில் காணக் கிடைக்கமாட்டார். வாய்புகு சோற்றைப் பறிப்பாரைப்போலே எம்பெருமான் நாம் அநுபவித்துக் கொண்டிருந்த சோற்றினைப் பறித்துக் கொண்டு போய்விட்டான். ஆசார்யன் சோறுபோன்றவனவன். இதனைற்முன் "ஆசார்யனைக் கண்டால் பரியன் சோற்றைக் கண்டாற் போலவும்" என்று பிள்ளை லோகாசார்யர் அருளியிருக்கிறார். பெருமகிழ்ச்சியோடு நாம் ஸ்வாமியின் வடிவழகையும் திவ்யஸூக்திகளையும் அநுபவித்து வந்தோம். நம்மை துயர்க்கடலில் மூழ்கச் செய்து விட்டான் எம்பெருமான் நமக்குப் பரியிருப்பது போலவே அவனுக்கும் பரி இருக்குமன்றே! இனி நாம் வாழ்க பல்லாண்டுகள் என்று அவனுக்கு வாழ்த்துக்கூறுவோம். ஸ்வாமியையும் மறவாமல் வாழ்த்துவோம். அவருடைய அபிமானம் என்பது அவரடிபணிந்த நமக்குக் கிடைக்கும் என்பது திண்ணம். ஸ்வாமியினுடைய பெருமையைப் பற்றி விக்வான்கள் பற்பலர் பேசியுள்ளார்கள். அப்படியிருக்கும்பொழுது அடியேனும் பேச வேண்டிய அவசியமில்லை; அடியேனுக்குப் பேசவுந்தெரியாது. எனினும் அடியேன் உய்வு பெறவே இச்சிறு விண்ணப்பம் செய்து கொண்டேன். "யாவுமேத்தி ஏழுலகும் முற்றும் ஏத்திப் பினையும் தானும் ஏத்திலும் தன்னையேத்தவேத்த எங்கெய்தும்" என்று அருளிய ஆழ்வார், "யானும் எம் பிரானையே ஏத்தினேன்" என்றார். 'எதற்காக ஏத்தினீர்' என்ற கேள்வி பிறந்தது; அதனால் "யான் உய்வான்" என்று அருளிச்செய்து முடித்துவிட்டார். இப்படியே தான் ஸ்வாமியினுடைய பெருமையுமாகும். "ஏத்வேத்த எங்கெய்தும்" என்பதே இங்குமுண்டு. ✱

சிறுவர் பகுதி

கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையே

பூமிகா

தாத்தா: — என்ன குழந்தைகளே! தீபாவளிப் பண்டிகை நல்லபடியாக முடிந்ததா?

குழந்தைகள் : — மிகவும் நன்றாகக் கொண்டாடினோம் தாத்தா. தீபாவளியன்று உங்களைப் பார்க்க எங்களால் வர முடியவில்லை அதனால் நாங்கள் எல்லோரும் எங்கள் தீபாவளி புத்தாடையை இன்று அணிந்து வந்திருக்கிறோம். உங்களை சேவிக்கிறோம் தாத்தா.

தாத்தா: நல்லது குழந்தைகளே. எல்லோரும் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும். இன்று கோவர்த்தனத்தைப் பற்றி சொல்லட்டுமா? வேண்டாமா?

நாராயணன்:— சொல்லுங்கள் தத்தா. அதற்காகதானே வந்திருக்கிறோம்.

தாத்தா:-கோவர்த்தனமலை வடமதுராவிலிருந்து சுமார் 20 கி. மீ. தொலைவில் உள்ளது. பிருந்தாவனத்திலிருந்து நேராக கோவர்த்தன மலைக்குச் செல்வதற்கும், வடமதுராவிலிருந்து கோவர்த்தன மலைக்குச் செல்வதற்கும் பஸ்வசதிகள் இருக்கிறது. ஆனால் வெகுநேரத்திற்கு பிறகுதான் பஸ்கள் வருகின்றன. வடதேசத்தில் நாங்கள் பேருந்துக்காக காத்த நேரம் மிகமிக அதிகம். கோவர்த்தனத்தில் மலையடிவாரத்தில் லக்ஷ்மி நாராயணர் கோயில் ஒன்று உள்ளது.

கண்ணன் :—கோவர்த்தன மலையைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன் தாத்தா!

தாத்தா :—நாங்கள் பார்த்த அரிதேவர் கோயிலைப் பற்றிச் சொல்லிவிட்டு கோவர்த்தனகிரியைப் பற்றிச் சொல்கிறேன் கண்ணு. இந்த ஹரிதேவர் கோயில் அப்பகுதியிலுள்ள கோயில்களில் மிகவும் பழமையானது இக் கோவிலின் உட்புறமாக இருக்குளம் ஒன்று உள்ளது இதன் நாலாபுறங்களிலும் படிக்கட்டுகள் உள்ளன இக்குளத்திற்கு 'மானஸ கங்கை' என்று பெயர்.

ஆண்டாள் :—மானச கங்கையா? நாங்கள் கேள்விப் பட்டதே இல்லையே அதற்கு ஏன் அப்பெயர் வந்தது தாத்தா?

தாத்தா:-அதாவது ராதை ஒருமுறை கங்கையில் குளிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாளாம் அதை நிறைவேற்ற கண்ணன், அந்த இடத்திலேயே கங்கையை தோன்றச் செய்தானும். கண்ணன் மனதால் சிருஷ்டித்த கங்கையாத லால் அதற்கு 'மானச கங்கை' என்று பெயர் வந்ததாகச் சொல்கிறார்கள். இதிலே ஒரு ஆச்சரியம். இதிலுள்ள தண்ணீர் மற்ற குளங்கள்போல் அல்லாமல் ஒரு நதிபோல ஓடிக்கொண்டே இருக்கிறது. நாங்கள் அங்கே தீர்த்தமாடி விட்டு, ஹரிதேவர் கோயிலுக்குச் சென்று, அதனை தரிசித்து விட்டு கோவர்த்தனமலை இருக்கும் இடத்திற்குச் சென்றோம்.

ஸ்ரீதேவி :—கோவர்த்தன மலை மிகப்பெரியதாக உள்ளதா தாத்தா?

தாத்தா :—உங்களைப் போன்றுதான் நாங்களும் 'மலை மிகப்பெரியதாக இருக்கும்' என்று நினைத்திருந்தோம். ஆனால் அங்கே சென்று அந்த கோவர்த்தன கிரியைப் பார்த்தபோது எங்களுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. இது உயர்ந்த மலை அல்ல; அழகான ஒரு நீளமான குன்று

தான்; இருந்தாலும் இதுமரங்கள் நிறைந்து அழகாக காட்சி தருகின்றது. இந்த மலையும் கண்ணன் மாடுகள் மேய்த்த இடமேயாகும் இந்த மலையின் சுற்றளவு சுமார் 15கி மீ. இருக்கும் என்று சொல்கின்றனர். உயரம் 8 அடிக்கு மேல் இல்லை.

நாராயணன் :—கோவர்த்தனத்தில் மக்கள் வசிக்கின்றனரா தாத்தா?

தாத்தா :—கோவர்த்தன மலையைச் சுற்றியுள்ள ஊரும் கோவர்த்தனம் என்றே வழங்கப்படுகிறது. அங்கே பல கடைகளும், பஸ்நிலையமும் காணப்படுகின்றன. அதில் மக்கள் இல்லை என்றாலும் சிலர் அங்கே வசிக்கின்றனர். மலையின் இருபுறங்களிலும் சிற்றூர்களும் வேளாண்மைக்குரிய நிலபுலன்களும் காணப்படுகின்றன. இந்த மலை சிறுசிறு கருங்கல் பாறைகளை கொண்டு காணப்படுகின்றன. இந்த மலை மிகச் சிறியதாக இருப்பதைக் கண்டு அங்குள்ள சிலரை விசாரித்தோம். அதற்கு அவர்கள் இந்த மலை துவாபரயுகத்திலே மிகப்பெரியதாக இருந்ததாகவும், கலியுகத்தில் சிறியதாகி விட்டதாகவும் கூறினர். கோவர்த்தன மலையை கண்ணன் குடையாகப் பிடித்த காரணம் உங்களுக்குத் தெரியுமா? இப்போ நான் சொல்லட்டுமா?

கண்ணன் :—அதைக் கதையை நான் சொல்கிறேன் தாத்தா. ஆய்ப்பெண்கள், வருடாவருடம் மழைக்கு அதி தேவதையான இந்திரனுக்குப் பூஜை செய்துவந்தனர். பூஜை செய்யப் பல வண்டிகளில் சோறும், தயிரும், நெய்யும் காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்ட கண்ணன் அவர்களை நோக்கி 'நாமும் நம் பசுக்களும் எதனால் ஜீவிக்கின்றோமோ, அதற்கே பூஜை செய்வது தகுதி. பசுக்களுக்கு வேண்டிய நீரும், புல்லும் இந்த கோவர்த்தன கிரியே கொடுக்கின்றது. பூஜையனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள்' என்று கூறினான் ஆயர்களும் அவ்வாறே செய்தனர்.

ஸ்ரீதேவி : பிறகு நான் சொல்கிறேன் கண்ணு. கண்ணன் தான் தேவருபங் கொண்டு அத்தனையும் அழுது செய்தருளினான். இதனால் கோபங் கொண்ட இந்திரன் அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்க எண்ணி, மேகங்களை ஏவி ஏழுநாட்கள் விடாமல் கல்மழை பெய்வித்தான். கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கி ஆயர்களுக்கும், பசு போன்ற சகல ஜீவராசிகளுக்கும் தினம நேராதபடி குடையாகப் பிடித்தான். பிறகு இந்திரன் தனது கோபத்தை ஒழித்து, கண்ணனிடம் மன்னிப்பு கேட்டான். ஒரு சந்தேகம் தாத்தா இந்த கோவர்த்தனம் ஆழ்வார்களால் பாடப் பெற்ற திவ்யதேசம் தானே தாத்தா?

தாத்தா :—அருமையான கேள்வி. கோவர்த்தன மலையைப் பற்றி ஆண்டாளும், பெரியாழ்வாரும் பாடியிருந்தாலும் இவ்வூரை மங்களாசாஸனம் செய்யவில்லை. எனவே இவ்வூர் 108 திருத் தலங்களுள் ஒன்றாக அமையவில்லை.

ஆண்டாள் : கோவர்த்தனத்திலிருந்து வேறு எங்கெங்கு சென்றீர்கள் தாத்தா?

தாத்தா : கோவர்த்தனத்திலிருந்து 18 கி மீ. தொலைவில் "நந்த காம்" என்றொரு கிராமம் உள்ளது. நந்த கோபருடைய இல்லம் இருந்த ஊர் இதுவே என்று சொல்லப்படுகின்றது. இந்த ஊர் ஒரு சிறு குன்றின் மீது அமைந்துள்ளது இங்கு பாலகிருஷ்ணனுக்கு ஒரு நிருக் கோயில் உள்ளது.

நாராயணன் : கண்ணன் பிறந்த இடமான வடமதுரையைப் பார்த்த நீங்கள், கண்ணன் வளர்ந்த இடமான கோகுலத்தைப் பார்த்தீர்களா தாத்தா?

தாத்தா : கோகுலம் செல்வதற்கு எங்களுக்கு அவகாசமே கிடைக்கவில்லை. இருந்தாலும், விருந்தாவனத்திலுள்ள ஸ்ரீரங்கஜி மந்திரை தற்போது பரிபாலித்து வரும்

கோவர்த்தனம் ரங்காசாரியாரிடமிருந்து, கோகுலத்தைப் பற்றி நாங்கள் தெரிந்து கொண்டதை உங்களுக்கும் கூறுகிறேன்.

குழந்தைகள் : சரி தாத்தா. நீங்கள் மேலே கூறுங்கள்.

தாத்தா : திருவாய்ப் பாடி [கோகுலம்] என்பது கண்ணன் நந்தகோபன் வீட்டில் வளர்ந்த இடமாகும். இது யமுனையின் வடகரையிலுள்ளது. இங்கே செல்வதானால் சுமார் 2 கி.மீ. அகலமுள்ள ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டுமாம் ஆற்றைக் கடந்து சென்றால் மீதி 6 கி.மீ. தொலைவுதான் இருக்குமாம். பாலத்தின் வழியாகச் சென்றால் 9 கி.மீ. தொலைவு செல்ல வேண்டுமாம் இதற்கு பேருந்து வசதிகள் இருக்கிறது. இந்த ஊர் மிகச் சிறியதாக இருக்குமாம். ஆனால் இங்கு கண்ணன் தன் பிள்ளைப் பருவத்தில் கழித்த இடம் இது தான் என்பது தவிர இங்கு விசேஷமாக கோயில்கள் எதுவும் இல்லை என்று அவர், எங்களிடம் கூறினார்.

கண்ணன் : அப்படியானால் கோகுலம் வெற்றிடமாகவே காணப்படுகிறதா தாத்தா?

தாத்தா : அவர் எங்களிடம் சொன்னதைப் பார்த்தால் எங்களுக்கும் அப்படித்தான் தோன்றியது. இந்த அடையாளங்களே இல்லாமல் போனதற்கு முகம்மதியர் படையெடுப்பே காரணமாக இருந்திருக்கலாம். மேலும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற நிருக் கோயில்களும் இன்று அங்கு இருப்பதாகத் தெரியவில்லையாம். உங்களைப் போன்றே நாங்களும் கோகுலத்தைப் பற்றித் தெரிந்து கொண்ட பின்னர் பத்து யாத்ரை செல்வதற்காக புதுடில்லி வந்து சேர்ந்தோம். அடுத்த மாதம் சந்திப்போம் குழந்தைகளே.

ஸுதர்சனர் பதில்

கோவிந்தராஜன், சென்னை-94 (11, 12)

11) '83 செப்டம்பர் ஞானபூமியில் "காசி முதல் ராமேஸ்வரம் வரையிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் மூல வரைத் தொட்டு பூஜை செய்யும் அதிகாரம் ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதிகளுக்கு உண்டு" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது உண்மையா?

இது பெரும் பொய். பாஞ்சராத்ரம், வைகாநஸம் என்னும் வைஷ்ணவாகமங்களின்படி பிரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணு கோயில்களில் சிருங்கேரி பீடாதிபதிகளைப் போன்ற பஸ்மதாரிகள் கர்ப்பக்ருஹத்தில் நுழைந்தால் உடனே ஸம்ப்ரோக்ஷணம் பண்ணவேண்டும். சில சிவாலயங்களில் தங்களுடைய செல்வாக்கால் இந்த உரிமையை இவர்

S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

ஆசிரியர், "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்"

கள் பெற்றிருக்கக்கூடும். மிகைப்படுத்தி இப்படி எழுதப் பட்டிருக்கிறது.

12) '83 செப்டம்பர் ஞானபூமியில் பழனிச்சாமி என்னும் காஷாயம் கட்டாத துறவி ஒருவர் 'வேதத்தை யார்வேண்டுமானாலும் கற்கலாம்' என்றும் சுதந்திரியரான ராமரும் யாதவரான கிருஷ்ணரும் வேதாப்யாஸம் செய்யவில்லையா' என்றும் கூறி, 'தாம் எல்லாச்சாதிக்காரர்களுக்கும் கிரமப்படி பூணூல் போட்டு வேதம் சொல்லிக்கொடுப்பதாகவும், வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லிக் கொடுக்கலாம்' என்றும் கூறியிருக்கிறார். சாஸ்திரங்கள் இதை அனுமதிக்குமா?

எல்லா சாஸ்திரங்களும் முதல் மூன்று வர்ணத்தவர்க்கே வேதத்தைப் பயில அனுமதி அளித்துள்ளன. பழனிச்

சாமியால் வேதம் சொல்லிக் கொடுக்கப்பட்டவர்களே மணியனுக்குப் பரமகுருவான சுவாமகோடி பீடாதிபதி தமது மடத்தில் வேதபண்டிதராக நியமிப்பாரா? வேதத்தைப் பல வருஷங்கள் பயின்ற அந்தணர்களிடமிருந்து அதைப் பயிலும் பரம்பரையில் வந்த அந்தணர்கள் கற்றுத்தான் ஸ்வரம் சரியாகவரும். ஸ்வரம் தப்பி வேதத்தை உச்சரித்தால், அதன்பயனே அநர்த்தமே விளையும் என்பதை வ்ருத்ராஸுரன் கதையில் வேதமே சொல்லுகிறது. ராமனும், கிருஷ்ணனும் க்ஷத்திரியர்களானதையாலே வேதம் பயின்றதில் விரோதமில்லை இக்காலத்தில் க்ஷத்திரிய வைசியர்கள் வேதாத்யயனத்தை விட்டுவிட்டபடியாலும், வேதாப்யாஸத்தைக் கொண்டு பணம் பண்ண முடியாதாகையாலும் அந்தணரில் ஒரு சிலரே வேதாத்யயனம் செய்கிறார்கள். இந்த உண்மையை மறைத்துப் பொய்யை வெளியிடுவது வேதத்துக்கு செய்யும் பெரிய துரோகம் ஆகும்.

S. முரளி, அந்தநல்லூர்.

13) '83 செப்டம்பர் ஞானபூமியில் "மஹாவிஷ்ணுதான் ஸர்வோத்தமர் என மாத்வர்களைப் போலவே வைஷ்ணவர்களும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் மஹாவிஷ்ணுவானவர் நிமித்த காரணமாக மட்டுமின்றி உபாதான காரணமாயும் இருக்கின்றார் என்று வைஷ்ணவர்கள் கருதுகின்றனர். பகவான் மாறுதலற்றவன், நாசமற்றவன், தோஷமற்றவன் (நிர்விகாரோ அட்சர ஹகத்தஹ) என்னும் சுருதிக்கு முரண்பாடாக உள்ளது இக்கருத்து. எனவே மாத்வர்கள் இதனை ஏற்பதில்லை நிமித்த காரணமாக மட்டுமே இருப்பவன் இறைவன் என்பது அவர்களின் கோட்பாடு" என்று ராமராவ் என்னும் மாத்வர் கூறியிருப்பது உண்மையா?

ஸ்ரீ ராமராவ் அவர்கள் நமது நண்பர் அவர் தமது நூல்களிலும், உபந்யாஸங்களிலும் அத்வைத மதத்தில் பற்பல முரண்பாடுகள் உள்ளன என்று பல இடங்களில்

காட்டியிருக்கிறார். நேர்மையோடு அவற்றையும் எடுத்துக் காட்டாமல் விசிஷ்டாத்வைதிகளுக்கும் தீவைதிகளுக்கும் உள்ள ஒரு வேறுபாட்டை மாத்திரம் எடுத்துக்காட்டுகிறது ஞானபூமி. "ஒரு மண் கட்டியை அறிந்தால் மண்ணாலான அனைத்தையும் அறிந்ததாவது போலவும். ஒரு பொன் கட்டியை அறிந்தால் பொன்னாலானது அனைத்தையும் அறிந்ததாவது போலவும் ப்ரஹ்மம் ஒன்றை அறிந்தால் அதன் காரியமான எல்லாப் பொருள்களையும் அறிந்ததாகிறது" என்றும், "ப்ரஹ்மமே தன்னைப் பல சேதனாசேதனப் பொருள்களாகப் படைத்துக் கொண்டது" என்றும் பல இடங்களில் வேதவாக்யங்கள் ப்ரஹ்மமே உலகுக்கு உபாதான காரணமாகின்றது என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றன. சேதனாசேதனப் பொருள்கள் அனைத்தும் ப்ரஹ்மத்துக்குச் சரீரம் என்றும், ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களின்போது அந்த சரீராம்சமே ஸ்தூல ஸூக்ஷ்மநிலைகளை அடைகிறது என்றும், பரஹ்மஸ்வரூபம் விகாரம் அற்றதாகவே இருக்கிறது என்றும் வேதவாக்யங்கள் தெளிவாக முழங்குகின்றன. தீவைதிகளே இந்த அபேத சுருதிகளுக்கும், சரீராத்ம பாவ சுருதிகளுக்கும் அமுக்யமாகப் பொருள் கொள்கிறார்கள் அத்வைதிகள் கணக்கற்றபேத சுருதிகளை அமுக்யமாகக் கொள்கிறார்கள். எல்லாவேதவாக்யங்களையும் முரண்படாமல் ஸமந்வயப்படுத்திப் பொருள்கொள்வது விசிஷ்டாத்வைத மதமொன்றேயாகும்.

S. வேங்கடம் சமலபுரம்

14 '83 செப்டம்பர் ஞானபூமியில் கேள்விபதில் பகுதியில் "தோற்றமில்லாத ப்ரணவவடிவாக இருக்கையால் பிள்ளையார் முதலும் முடிவும் இல்லாத முழு முதற்கடவுள்" என்று திருபாலந்தவாரியார் எழுதியிருக்கிறார். இது உண்மையா?

பிள்ளையார் யானை முகத்தை உடையவராகவும், அதன் துதிக்கை வளைந்திருப்பதாலும் பிள்ளையாரை ப்ரணவ

வடிவமாகக் கற்பிக்கிறார்கள் சைவர்கள். இந்தக் கற்பனையைக் கொண்டு அவரை முழுமுதற்கடவுளாக்கப்பார்த்தால் வளைந்ததுதிக்கையுவுடய எல்லா யானைகளும் முழுமுதற் கடவுளாகவேண்டிவரும். இந்த பதிலில் முதற்பகுதியில் "சிவகுமாரர்களில் மூத்தவர் பிள்ளையார்" என்று எழுதுகிறார் வாரியார். சிவகுமாரராக இருப்பவர் எப்படி முழுமுதற்கடவுளாக இருக்கமுடியும் என்பதைக்கூட அறியமுடியவில்லை ஐயோ பாவம்! வேதசாஸ்திரங்களில் முழுமுதற் கடவுளாக முழங்கப்படும் திருமாலுக்குப் போட்டியாக சிவனைக்கூற முற்பட்டது இப்படி வ்யவஸ்தையில்லாமல் எல்லாக் கடவுளரையும் முழுமுதற்கடவுளராக ஒப்புக் கொள்ள வேண்டியநிலையில் கொண்டுபோய் இவர்களைத் தள்ளிவிட்டது. தம்மை பெற்ற தகப்பன் யார் என்னும் விஷயத்திலேயே இப்படி மக்களைக் குழப்பிவிட்ட இவர்களை அந்த ஆதிபரம்பொருள்தான் மன்னிக்கவேண்டும்!

S. சடகோபன் உடுமலை, K. சம்பத் ஸ்ரீரங்கம்.

15. '83 செப்டம்பர் ஞானபூமியில் கடைசிக் கட்டுரையில் திருக்குடந்தை ஆராவமுதன் சன்னதி நிர்வாகி திரு S. ஸ்ரீநிவாஸன் "திருப்பதி வெங்கடாஜலபதியை மங்களாசாஸனம் செய்தவர்கள் பதினோருபேர் அடுத்ததாகத் திருவரங்கப்பெருமானை மங்களாசாஸனம் செய்தவர்கள் ஒன்பதுபேர்" என்று கூறியதாக எழுதப்பட்டிருக்கிறது. இது உண்மையா?

மதுரகவியாழ்வார் தவிர மற்ற எல்லா ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் திருவரங்கப் பெருமானைப்பாடியிருக்கிறார்கள் என்பதும், மதுரகவிகளும் தொண்டரடிப் பொடிகளும் தவிர மற்ற பதின்மரே திருவேங்கடவனைப் பாடியிருக்கிறார்கள் என்பதும் வைணவ வுலகம் முழுதும் அறிந்தது. இதைக்கூட அறியாமல் மனம்போனபடி எழுதுவதும் அதை சரியா தவறா என்றே அறிந்து கொள்ளாமல் பிரசுரிப்பதும் தவறாகும். வேங்கடாசலபதியை வெங்கடாஜலபதி என்று எழுதுவதிலிருந்து இவர்களுக்கு வடமொழி ஞானமேயில்லை என்பது நன்கு புலனாகிறது. இப்படி இவர்கள் எழுதுவதைவிட எழுதாமலிருப்பது மேல்.

கண்ணன் கதைகள்

தீபம். நா. பார்த்தசாரதி

39. வாணன் வீழ்ந்தான்

காலத்திகிரி வேகமாகச் சுழன்றது. எத்தனையெத் தனையோ ஆண்டுகள் சுழன்று சுழித்தன. கண்ணனுடைய வாழ்க்கையில் துணைகொண்ட எட்டு மனைவிமார்களும் ஆயிரக்கணக்கான கன்னிகைகளும் வீடு நிறைய மக்களைப் பெற்று மழலைச் செல்வங்களைப் பெருக்கியிருந்தனர். அவர் கள் எல்லோரும் வளர்ந்து பெரியவர்களாயிருந்தனர். கண்ணனின் புதல்வர்கள் எல்லோரும் கண்ணனைப் போலவே அழகுடையவர்களாக இருந்தார்கள்.

முதலில் கண்ணனுக்கு உருக்குமிணியிடம் மகனாகப் பிறந்த பிரத்யும்னனுக்கு மண ஏற்பாடு நடந்தது. உருக்கு மிணி தன் தமையனாகிய உருக்குமியின் மகளுக்குத் தன் மகனை மணம் முடிக்கவிரும்பினாள். போசகூடமென்ற இடத் தில் சுயம்வரம் நடந்தது. பிரத்யும்னன் தன் தந்தை கண்ண னோடு சென்று சுயம்வரத்தில் மற்ற அரசர்களைத் தோற் கடித்து உருக்குமியின் மகளைத் தானே கைப்பற்றி வந்தான். பிரத்யும்னனுக்கும் கண்ணனுடைய மற்றப் புதல்வர்களுக் கும் ஏற்ற இடங்களில் இளைந்த பெண்களுடன் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாறு கண்ணனுடைய புதல் வர்களுக்குத் திருமணம் நடந்தபோது உருக்குமியும் அவன் தோழனான கலிங்கனும் பலராமனைச் சொக்கட்டானாடு வதற்கு அழைத்தார்கள். சொக்கட்டான் ஆட்டத்தில் சூழ்ச்சிகள் பல செய்து பலராமனை வெல்ல முயன்றார்கள். ஆனால் சூழ்ச்சிகள் புரிந்து பலராமனைத் தோற்கவும்

செய்தார்கள். பலராமன் கடுஞ்சினம் அடைந்து அவர்களைத் தாக்கி அடித்துத் துன்புறுத்தினான். அதன்பின் திருமணங் களெல்லாம் முடிந்த களிப்பில் எல்லோரும் துவாரகைக்குச் சென்று சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

சில ஆண்டுகளில் பிரத்யும்னனுக்கு உருக்குமவதி யினிடத்தில் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு அநிருத்தன் என்று பெயர் வைத்துச் சிறப்பாக வளர்த்து வந்தார்கள். கண்ணனும் அந்தப் பேரப்பிள்ளையாண்டானிடத்தில் தன் உயிரையே வைத்திருந்தான். அந்தப் பேரன் வளர்ந்து வாலிபனாகிப் பெண்களின் உள்ளத்தைக் கவரும் கட்டழகனாக விளங்கினான்.

இந்து இவ்வாறிருக்க மகாபலிச் சக்கரவர்த்தியின் புதல்வர்களிலொருவனாகிய பாணாசுரன் என்ற அசுரனுக்கு அழகில் இணையற்ற உஷை என்ற மகள் ஒருத்தி இருந்தாள். பாணாசுரன் சிவபெருமானைத் தவிர மற்ற எல்லோரையும் வெல்லும் சக்தி பெற்றிருந்தான். "எப்போது உன்னுடைய கொடி அறுந்து விழுகிறதோ, அப்போது என்னைக் காட்டி லும் அதிக வல்லமையுள்ளவனோடு போர் செய்து நீ தோற்றுப் போவாய்"—என்று சிவபெருமானே அவனுக்குக் கூறியிருந்தார். அவனுடைய மகளாகிய உஷை ஒருநாள் கனவில் கண்ணனுடைய பேரனாகிய அநிருத்தன் தன்னோடு அளவளாவி இன்புற்றிருந்ததாகக் கண்டாள். அதிலிருந்து அவள் எப்போதும் அவனையே எண்ணி ஏங்கத் தொடங் கினாள். அவனுடைய அழகைக் கனவிற் கண்டு பைத்தியமாகி யிருந்தாள் அவள். அதனால் அவளுடைய தோழியாகிய சித்திரலேகை என்பவள் தனக்குத் தெரிந்ததொரு மாய வித்தையினால் கண்ணனுடைய பேரனாகிய அநிருத்தனை அவன் படுத்திருந்த கட்டிலோடு தூக்கிக் கொண்டுவந்து உஷையிடம் விட்டுவிட்டாள். உஷை அந்த இளம்பருவத்து ஆணழகனை வைத்துக்கொண்டு இன்பத்திருவிளையாடல்கள்

புரிந்து மகிழ்ச்சியடைந்திருந்தாள். அநிருத்தனும் ஈடு இணையற்ற அவள் அழகில் மயங்கி இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தான். வெகுநாட்கள் வரை பாணசுரனுக்குத் தெரியாமலே நடந்து கொண்டிருந்த இந்த இன்ப விளையாட்டு இறுதியில் ஒரு நாள் பாணசுரனுக்குத் தெரிந்தே விட்டது. உடனே கன்னிமாடத்துக்குள் புகுந்து தன் பெண்ணிடம் பழகியதற்காக அநிருத்தனைப் பிடித்து நாகபாசத்தினால் கட்டிச் சிறைச்சாலைக்குள் அடைத்து விட்டான் பாணசுரன். நாட்கள் கழிந்தன. துவாரகையில் அநிருத்தனைக் காணுமல் எல்லோரும் திகைத்துப் போயிருந்தார்கள். அந்தச்சமயத்தில் நாரதர் அங்கு வந்து அநிருத்தன் பாணசுரனால் சிறைவைக்கப் பட்டிருக்கும் செய்தியைக் கண்ணனிடத்தில் கூறினர். உடனே கண்ணன், பிரத்யும்னன் முதலிய எல்லோரும் படைகளைத் திரட்டிக் கொண்டு பாணசுரனின் தலைநகரமாகிய சோணிபுரத்திற்கு விரைந்தனர். கோட்டைகளை இடித்து அகழியைத் தூர்த்து அவர்கள் நகரத்திற்குள் நுழைந்த போது, பாணசுரனும் பெரும் படையை திரட்டிக்கொண்டு சிவபெருமான், விநாயகன், முருகன் ஆகியவர்களோடு எதிர்ப்பதற்கு வந்து சேர்ந்தான். ஆனால் தொடக்கத்திலேயே அபசகுனம் போலப் பாணசுரனுடைய கொடி அறுந்து விழுந்தது.

துவாரகையிலிருந்து வந்திருந்த கண்ணனுடைய படைக்கும் பாணசுரனின் பெரும்படைக்கும் போர் மூண்டது. சிவபெருமானே கண்ணனை எதிர்த்துப் போரிட்டார். ஆனாலும் அவரால் கண்ணனை ஒன்றும் செய்யமுடியவில்லை. பாணசுரனுடைய ஆயிரம் கரங்களில் மற்றவற்றையெல்லாம். கண்ணன் அறுத்துத் தள்ளிவிட்டான். சிவபெருமான் பார்த்தார். அவருக்கு வேறு ஒரு வழியும் தோன்றவில்லை. "கண்ணு! நீதான் காப்பாற்றவேண்டும். பாணசுரன் நெடு நாள் உயிர் வாழவேண்டுமென்று நான் அவனுக்கு வரம் கொடுத்திருக்கிறேன். என் வரம் பலிக்காமற் போகும்படி

நீ அவனைக் கொன்றுவிடாதே. எனக்காக அவனை உயிரோடு விட்டுவிடு" என்று சிவபெருமானே வலுவில் கண்ணனை வணங்கி வேண்டிக் கொண்டார்.

"சிவபெருமானே! நீங்கள் கூறினாலும் கூறுவிட்டாலும் நான் இவனைக்கொல்லமாட்டேன். பிரகலாதனுடைய மரபில் பிறக்கும் அசுரகுலத்து வீரர்களைக் கொல்வதில்லை எனறு நானே முன்பு சபதம் செய்திருக்கிறேன். ஆகவே இவனைக் கொல்ல மாட்டேன்" என்றான் கண்ணன்.

"பாணாசுரா! உனக்கு மீதமிருக்கும் நான்கு கைகளிலும் இந்த வேலாயுதத்தை ஏந்திக்கொண்டு வாழ்வாயாக" என்று சொல்லி ஒரு வேலாயுதத்தைக் கண்ணன் அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். பாணாசுரனும், தன் மகள் உஷையோடு அநிருத்தனையும் கொண்டு வந்து ஒப்படைத்து "இவர்கள் இருவருக்கும் மணம்புரிந்து வைத்துவிடுங்கள்" என்று சொல்லி வணங்கினான். கண்ணன் உஷையைத் தன் பேரன் அநிருத்தனுக்கு மணமகளாக ஏற்றுக்கொண்டான். துவாரகைக்கு அழைத்துக் கொண்டுபோய் அவர்கள் இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் செய்து வைத்தான். கண்ணனுடைய புதல்வர்களும் பேரர்களும் களிப்பு நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். (தொடரும்)

கீதாசார்யன் சந்தா விவரம்

ஆண்டு சந்தா	...	ரூ. 15
ஆயுள் சந்தா	...	ரூ. 250

ஸ்ரீ பாஷ்யஸாரம்

உபயலிங்காதிகரணம் மூன்றுமத்யாயத்தின் இரண்டாவது பாதத்திலுள்ளது. ஜீவாத்மாவானவன் ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி மூர்ச்சாதி அவஸ்தைகளுக்கு ஹேதுவான நாநா சரீரங்களை ஏற்றுக்கொண்டு அவ்வவஸ்தைகளில் ஸுகதுக்கங்களை யநுபவிக்கிறான். அப்படிப்பட்ட ஜீவனுலே அதிஷ்டிதமான சரீரத்தில் பரமாத்மாவும் ஸம்பந்தப்பட்டிருந்தாலும் தத்ப்ரயுக்தமான ஸுகதுக்காதி அபுருஷார்த்த லேசமும் தன்னிடத்தில் ஒட்டப் பெறுமலிருக்கிறானென்பதையும் கல்யாணகுணக்கடலா யிருக்கிறானென்பதையும் நிரூபிக்க இவ்வதிகரணம் தோன்றியது. [நஸ்தாநதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி] என்பது இவ்வதிகரணத்திற்குத் தலையான ஸூத்ரம் பரஸ்ய—பரமபுருஷனுக்கு, ஸ்தாநத: அபி-ஜீவாதிஷ்டித நாநா சரீரங்களில் இருப்பு இருந்தாலும், ந—அபுருஷார்த்த ஸுகதுக்க ஸம்பந்தம் கிடையாது. (இதற்கு ஹேதுவென்னெனில்;) ஸர்வத்ர ஹி உபயலிங்கம்—பரமபுருஷன் ஸர்வச்ருதி ஸ்மிருதிகளிலும்

ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

ஹேயப்ரத்யநீகத்வம் கல்யாணைகதாநத்வம் என்கிற இரண்டு அஸாதாரண தர்மங்களோடு கூடியவனுக ப்ரதிபாதிக்கப் படுகையாலே—என்பது ஸூத்ரத்தின் பொருள். "அபஹதபாப்மா விஜர:" இத்யாதி ச்ருதிகளிலும், "ப்ர: பராணம் ஸகலா நயத்ரக்லேசாதயஸ் ஸர்தி பராவரேசே" இத்யாதி ஸ்ம்ருதிகளிலும் பரமபுருஷன் இயற்கையாகவே ஹேயப்ரத்யநீகனுயும் கல்யாண குணகரனுயுமிருக்கிறானென்று சொல்லப்படுகையாலே ஹேயப்ரதிபடனான அப்பரமபுருஷனிடத்தில் சரீரஸம்பந்தமானது அபுருஷார்த்த ஸுகதுக்காபத்திக்கு ஹேதுவாகமாட்டாது. அவன்

அபஹதபாப்மாவெனப்படுகிறான். புண்யபாபரூப கருமங்களின்பலன் ஸ்பர்சிக்கப்பெறுதிருத்தலே அபஹதபாப் மத்வமாம் அதாவது புண்யபாப ஸஜாதீயங்களான கருமங்களைத் தான் செய்தாலும் அவை பலன் கொடுக்கும்படியான சக்தியைப் பெறுதபடி. அந்த சக்தியைத் தொலைத்திடுகையே யாம் ஹேயப்ரத்யநீகத்வமென்பதும் இதுவே. இப்படி விலக்ஷணசக்தியுக்தனான பரமபுருஷனிடத்தில் ஹேயதேஹ ஸம்பந்தமுண்டானாலும் அது அபுருஷார்த்த ஸாதனத்துக்கு ஸமுத்பாதகமாக ஆகமாட்டாது. ஹேயதேஹஸம்பந்தமானது கர்மாதீநமன்றிக்கே ஸ்வேச்சாக்ருதமாகையாலே.

இதற்குமேல் ஒரு சங்கை தோன்றும்; பரமபுருஷனுக்கு தேஹஸம்பந்தம் கர்மப்ரயுக்தமன்றிக்கே ஸ்வேச்சாக்ருதமாகவே யிருக்கட்டும். ஹேயஸம்பந்தமானது வஸ்துஸ்வபாவத்தாலே அபுருஷார்த்தாபாதகமாகியே நிற்குமன்றே. மாம்ஸாஸ்ருக்பூயவின் மூத்ரவெள்ளத்தில் ஒருவன் ஸ்வேச்சையினாலே அமிழ்ந்தாலும் ஹேய ஸம்பந்தமுண்டாகித்தானே நிற்கும்—என்று சங்கிக்கக்கூடும். இங்கு உணரவேண்டிய தத்துவமாவது—ஹேயத்வமென்பது கர்மக்ருதமேயொழிய வஸ்துஸ்வபாவப்ரயுக்தமன்று. ஸம்ஸாரதசையில் எந்த வஸ்துவும் அநுகூலமாகத் தோன்றுவதும் பிரதிகூலமாகத் தோன்றுவதும் தத்தத் வஸ்துஸ்வபாவத்தாலன்று. அப்படியாகில் எதுவும் எவனுக்கும் அனுகூலமாகவேயோ ப்ரதிகூலமாகவேயோ இருந்து தீரவேணும். இப்படி எங்கும் காணப்படவில்லை. இன்று அநுகூலமானது நாளைக்கு ப்ரதிகூலமாகிறது. அதுதானே மற்றொருநாள் அநுகூலமாகிறது. ஆகவே எந்த வஸ்துவும் ஸம்ஸாரதசையில் அநுகூலமாயிருப்பதும் பிரதிகூலமாயிருப்பதும் கர்மக்ருதமேயாதலால் அகர்மவச்யனான பரமபுருஷனுக்கு ஸர்வவஸ்துக்களும் தன் விபூதியாய்க் கொண்டு அநுகூலமாகவேயிருக்குமென்று கொள்ளக்கடவது. ஆகவே ஹேய

பூத தேஹஸம்பந்தம் பரமபுருஷனிடத்தில் அபுருஷார்த்த பாதகமாகாதென்றதாயிற்று. ... ...

ஸர்வாந்நாநுமத்யதிகரண ஸாரம்

மூன்றுமத்யாயத்தின் கடைசி பாதத்திலுள்ள ஸர்வாந்நாநுமத்யதிகரணத்தைப் பற்றிப் பேசுகிறேன். இதற்கு முந்தின அதிகரணத்தில் ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு சமம் ஆவச்யகமென்று சொல்லிற்று. போஜந நியமமாகிற சம விசேஷம் ப்ரஹ்மவித்துக்கு உண்டா இல்லையா என்பதை விசாரித்து நிர்ணயிக்க இவ்வதிகரணம் தோன்றியது. *[ஸர்வாந்நாநுமதிச்ச ப்ராணாத்யயேததத்தர்சநாத்] என்பது ஸூத்ரம். (ச) சப்தமானது அவதாரணப்பொருளது. ப்ராணவித்யா நிஷ்டன் எந்த அன்னத்தையும் புஜிக்கலாமென்று அனுமதிப்பது ப்ராணபத்தசையைப்பற்றியதேயாம்; ப்ரஹ்மவித்தான அதிகாரியின் விஷயத்தில் ப்ராணபத் விஷயமாகவே காண்கையாலே—என்று ஸூத்ரார்த்தம். இங்கு பூர்வபக்ஷம்; ச்சாந்தோக்யத்தில் ஐந்தாவது ப்ரபாடகத்தில் ப்ராணவித்யாப்ரகரணத்தில் *"ந ஹவா ஏவம்விதி கிஞ்சந அநந்நம் பவதி" என்று ஓதப்பட்டிருக்கிறது. ப்ராண வித்யா நிஷ்டனுக்கு அன்னமாகாதது எதுவுமில்லையென்று இதற்குப் பொருள். ப்ராணவித்யா நிஷ்டனுக்கு நிஷித்தாந்ந போஜனமும் ஸர்வதா கூடுமென்றும், வித்யா மாஹாத்மியத்தினால் இதில் தவறில்லையென்றும் சொல்லுவதாகத் தெரிகிறது. அல்ப சக்திகளான ப்ராண வித்யா நிஷ்டனுக்கே நிஷித்தாந்ந போஜனம் அனுமதிக்கப்படுமானால் ப்ரஹ்ம வித்யாநிஷ்டனுக்கு அந்த அநுமதி கைமுதிக ந்யாய ஸித்தமே—என்று பூர்வபக்ஷம். இதன் மேல் ஸித்தாந்தம் வருமாறு :—ப்ரஹ்ம வித்யா நிஷ்டனான உஷஸ்தன் ப்ராணபத்தசையில் ஒரு யாஜகப்பாகன் உண்டு மிகுந்த காரமணியை புஜித்து அதனால் உயிர்தரிக்கப்

பெற்றுனென்றும், பிறகு அந்த ஆசார்யப்பாகன் கொடுத்த பானத்தை அவன் [உஷஸ்தன்] ஏற்றுக்கொள்ளவில்லை யென்றும் சாந்தோக்யத்தில் முதல் ப்ரபாடகத்தில் (கண்டம்-9) உஷஸ்த வ்ருத்தாந்த ப்ரகரணத்தில் காண்கிறது. இதனால், மஹா மஹிமசாலியான ப்ரஹ்மவித்துக்கும் நிஷித்தாந்நபக்ஷணம் ஆபத்விஷயமென்று தெரிவதனாலும், ஆஹாரசுத்தி ஆவச்யகமென்று தெரிவதாலும், ப்ராஹ்மண ஸாமாந்யத்திற்கும் ஆபத்காலத்தில் ஸர்வாந்நமும் அநுமதிக்கப்படுவதாக காண்கையாலும் ப்ரஹ்மவித்தான அதிகாரிவிசேஷத்திற்கும் ஸர்வாந்நாநுமதியானது ஆபத்கால மாத்ர விஷயகமென்று ஸித்திக்கும்போது, அல்ப சக்தியான ப்ராணோபாஸகனுக்குக் காணும் ஸர்வாந்நாநுமதியும் ஆபத் விஷயகந்தானென்பது பற்றிச் சொல்ல வேணுமோ? ... ... *

ஆவ்ருத்த்யதிகரண ஸாரம்

பெரும்பாலும் உபாஸநபரமாகச் சென்றது மூன்றுமத்யாயம். உபாஸநத்தின் பலனை நிரூபிக்க அவதரிக்கின்றது நாலாமத்யாயம். இதில் முதலதிகரணம் ஆவ்ருத்த்யதிகரணம். மோக்ஷத்திற்கு உபாயபூதமான பகவதுபாஸநம் அஸக்ருதாவ்ருத்திரூபம் (அதாவது) தைல தாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தானரூபம்; ஏனென்னில், *ப்ரஹ்மவிதாப்நோதி பரம்* இத்யாதிகளில் விதிக்கப்பட்ட வேதநமானது அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தான ரூபத்யாநத்வாவஸ்தையை யுடையதென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே-என்னும் பொருளான ஸூத்ரம். [ஆவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத்] என்பது முதல் ஸூத்ரம். இங்கு பூர்வபக்ஷம்;—*ஜ்யோ திஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத'' இத்யாதிகளில் ஸ்வர்க்க ஸாதநமாக விதிக்கப்பட்ட யாகாதிகள் ஸக்ருத்கரணத்தாலேயே எப்படி ஸ்வர்க்காதி பல ஸாதகமாகிறதோ அப்படி இங்கும் *ப்ரஹ்மவிதாப்நோதி பரம்* இத்யாதிகளில் மோக்ஷஸாதநமாக விதிக்கப்பட்ட பகவச்

சிந்தநரூபமான வேதநமும் ஸக்ருதநுஷ்டாநத்தாலேயே மோக்ஷஸாதகமாகக் கூடுமாதலால் அது ஒருகாலே செய்யப்படவேணுமென்று. இப்பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம் வருமாறு:—வேதாந்த சாஸ்த்ரங்களில் மோக்ஷஸாதநமானதைச் சொல்லிவருமடைவுகளில் வேதநம், உபாஸநம், த்யாநம், த்ருவாநுஸ்ம்ருதி, ஸாக்ஷாத்காரம், பக்தி என்கிற சப்தங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் பர்யாயபதங்களென்று நிச்சயிக்கப்படுமிடத்து தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாந ரூபமானதென்றே அறுதியிடவேண்டியதாகிறது. *பக்த்யா த்வநந்யயா சக்ய: அஹ மேவம் விதோர்ஜுந* இத்யாதி கீதா ச்லோகங்களும் இதையே வற்புறுத்துகின்றன. மேலே ஆருவதாக *ஆப்ரயாணநிகரணமுள்ளது. *ஆப்ரயாணாத்ததாபி ஹி த்ருஷ்டம்* என்பது ஸூத்ரம், மோக்ஷஸாதநமான ப்ரஹ்மோபாஸநமானது. மரணந்தமாக அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று அதில் நிரூபிக்கப்படுகின்றமையறிக.

(தொடரும்)

WITH BEST COMPLIMENTS FROM:
Sree Meenakshi Foil Prints
D.S. & Co., (Sree Press)
71, G.N. Chetty Road,
T.Nagar, Madras-600 017. Phone: 443955

திருமாலின் திருநட்சத்திரம்

"மத்தக் களிற்று வசுதேவர் தம்முடை
சித்தம் பிரியாத தேவகி தன் வயிற்றில்
அத்தத்தின்பத்தா நாள் தோன்றிய வச்சுதன்
முத்தமிருந்தவா காணீரே! முகிழ் நகையீர் வந்து காணீரே"

மகாபாரத கதாநாயகன் கண்ணன். நமது இதிகாசங்கள் இரண்டு. மகாவிஷ்ணுவான திருமால், அடியார்களின் துயரங்களைப் போக்க. பல அவதாரங்களை எடுத்து, இன்னல்களை தீர்க்கிறார். திருமால் எடுத்த பத்து அவதாரங்களில் பூர்ண அவதாரமாக கிருஷ்ணவதாரத்தையும் சொல்லுவதுண்டு. கிருஷ்ணன், வசுதேவர்...தேவகிக்கு பிள்ளையாகப் பிறக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணன் ஆவணி மாதத்தில் ரோகிணி

நட்சத்திரத்தில் ஜனனமானார். இதை இன்றும் நாம் ஸ்ரீ ஜயந்தியாக கொண்டாடுகிறோம். திருமாலின் திருநட்சத்திரம்—ரோகிணி—அவதாரக் காலத்தில். அவருக்கு திருவோணம்—திருநட்சத்திரமாக, திருவேங்கடமுடையான் வரலாற்றில் இடம் பெறுகிறது. அஸ்த நட்சத்திரம் காஞ்சி எம்பெருமானின் திருநட்சத்திரம். ஆக திருமாலின் திருநட்சத்திரங்கள். ரோஹிணி — அஸ்தம் — திருவோணம் ஆகின்றது. இந்த திருநட்சத்திரங்களை.

நாலாயிர திவ்யப்ரபந்தத்திலே—பெரியாழ்வார் திருமொழியில்—முதற் பத்து—மூன்றும் திருமொழியில்—ஆறுவது பாடலில்-சீதக்கடல் என்ற திருமொழியை ஆரம்பித்து

மத்தக்கறிற்று என்ற பாசுரத்தில்—தேவகி தன் வயிற்றில் "அத்தத்தின் பத்தா நாள் தோன்றிய வச்சுதன்"! என்கின்றார். அத்தத்தின் பத்தாம் நாள் என்றார்.

அத்தம் என்பது அஸ்த நட்சத்திரத்தைக் குறிக்கின்றது அந்த நட்சத்திரம் முதல் கொண்டு எண்ண பத்தாவது திரு நட்சத்திரம் "ரோஹிணி"யாகும். இந்த ரோஹிணியை முதலாகக் கொண்டு எண்ணிவர—அஸ்தம் திரும்பவும் பத்தாவதாக வரும்.

ஆழ்வார் கணக்கை இவ்விடம் சற்று ஆராய்ந்து பார்த்தால் புரியும்.

அஸ்தம் என்று முதலில் கூறிவிட்டார். அஸ்தத்தை (அத்தத்தை) மையமாக வைத்து இதே எண்ணினால் ரோஹிணி வரும். அதே போல அத்தத்தை மையமாக வைத்து மேலேண்ண திருவோணம் வரும். அற்புதமான கணக்கின் மூலம் இன்னென்றையும் பார்ப்போம்.

ஒவ்வொரு ராசிக்குரிய நட்சத்திரத்திலே—மையமாக ஒரு பூரணமான நட்சத்திரத்தைத் தேர்ந்தெடுத்து பாடல் பாடிய திறனைப் பாருங்கள்.

திருமாலின் திருநட்சத்திரங்களை ஒரு சிறிய கணக்கின் மூலம் பெரியாழ்வார் நமக்குக் காட்டினார்.

மேலும் ஒரு சிறு விளக்கத்தைப் பார்ப்போம்.

பெரியாழ்வாரின் பாடலில் மறைந்து கிடந்த அத்தம் (அஸ்தம்) திருவோணம். ரோகிணி ஆகிய நட்சத்திரங்களைப் பார்த்தோம்.

தற்போது அதற்குரிய ராசிகளைச் சற்று கவனியுங்கள். அஸ்தம் நக்ஷத்திரத்திற்குரிய இராசி "கன்னி". கண்ணன் எப்போதும் பெண்களின் கூட்டத்திற்கிடையே காணப்படுவான். (கோபியர்கள் கொஞ்சும் ரமணன்) திருவோணம் நட்சத்திற்குரிய இராசி "மகரம்". மகரயாழ் எப்போதும் இனிமையாகவே நாதம் எழுப்பும். அது போலவே கண்ணனின் குழலோசையில் மயங்காதவர்களே இல்லை. ரோஹிணி நட்சத்திரத்திற்குரிய இராசி "ரிஷபம்". திருமாலான கண்ணன் எப்போதும் மாடுகள் மேய்க்கும் கண்ணனுக்கே காட்சியளிப்பான்.

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே என்று ஆண்டாளை — நாம் நினைவு படுத்திக் கொள்வதுண்டு. ஆண்டாளை வளர்த்த பெருமை—பெரியாழ்வாரைச் சாரும். ஆண்டாள் திருமாலையே கைப்பற்றினாள்.

ஆண்டாள் எப்போதும் திருமாலின் நினைவாகவே இருந்தவள்.

பெரியாழ்வார் எப்போதும் திருமால் சூடிக் கொள்ள மலர் மாலைகளை கட்டிக் கொடுத்தவர்.

மலர் மாலையையும் அந்த மலர்மாலையை சூடிக் கொடுத்த சுடர் கொடியாளையும் – திருமாலுக்கே அர்ப்பணித்தார்.

அது போல அவர் தேர்ந்தெடுத்த திருமாலின் திருநட்சத்திரங்களாக அவரது திருமொழியினில் ரோஹிணி – அத்தம்—திருவோணம் என்று அமைந்துவிட்டது.

★

சக்ரபாணிப் பெருமாள்

(திருக் குடந்தை)

பாஸ்கர க்ஷேத்ரம் :— திருக்குடந்தை எனப்படும் கும்ப கோணத்திற்குப் பாஸ்கர க்ஷேத்ரம் என்று பெயர். பாஸ்கரன் என்ற சொல், சூரியனைக் குறிக்கிறது. நவக்ரஹங்களில் முதன்மையானவன் சூரியன். சோழ நாட்டில் ஒன்பது க்ரஹங்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு க்ஷேத்ரம் இருக்கிறது. சூரியதேவன் பகவானைக் குறித்து தவம் செய்தானு? அவன் பெயர் இந்த க்ஷேத்திரத்திற்கு எப்படி ஏற்பட்டது? என்றெல்லாம் நமக்குத் தோன்றுவது இயற்கையே! உலகிலுள்ள ஒளிப் பொருள்களில் மிகவும் சிறந்தவன் சூரியன். அவனருகில் எவரும் செல்ல முடியாது? சூரிய ஒளி புகாத இடமே இல்லை.

பகவான் பஞ்சாயுதங்களைத் தரித்திருக்கிறான். 'சங்கு வில் வாள் தண்டு சக்கரம்' என்று அவற்றின் பெயர்களைக் கூறுகிறார்

ஆழ்வார். பகவான் வலக்கையில் சக்கரமும், இடக்கையில் சங்கும் ஏந்திக் கொண்டிருக்கிறார். ஐந்து ஆயுதங்களையும் நித்யஸூரிகள் என்று பெரியோர்கள் கூறுவார்கள். அதனால் சக்கரத்தைச் சக்கரத்தாழ்வான் ஸுதர்சனாழ்வான் என்றும் சங்கினைப் பாஞ்சஜன்யாழ்வான் என்றும் கூறுகிறோம். ஸுதர்சனாழ்வான் மிக்க ஒளியுள்ளவர். கோடிக்கணக்கான சூரியன் இருந்தால் எவ்வளவு ஒளி இருக்குமோ, அவ்வளவு ஒளி யுடையவர். ஒரு சமயம் சூரியனுக்கும் ஸுதர்சனாழ்வானுக்கும் போர் ஏற்பட்டது. சூரியன் அப்போரில் தோற்றுப்போய் ஒளி இழந்தான். பெருமையை இழந்த சூரியன் ஆராவமுதனின் திருக்கையில் உள்ள சுதர்சனாழ்வானைக் குறித்துத் தவம் செய்தான். எம்பெருமானின் திருவருளால் இழந்த ஒளியை மீண்டும் பெற்றான். 'நான் தேவரீருடைய திருவருளால் பெருமை பெற்றதற்கு அடையாளமாக இந்நகர் (குடந்தை

நகர்) என் பெயராலேயே விளங்க வேண்டும்' என்று சூரிய ஆராவமுதவிடம் வரம் கேட்டான். பெருமாளும் திருவுள்ள உவந்தார். அது முதல் திருக்குடந்தை பாஸ்கர க்ஷேத்ர மாயிற்று. இந்த வரலாறு கும்பகோண மாகாத்மியத்தில் கூறப்படுகிறது.

சக்கரத்தாழ்வாரின் பெருமை விளங்கும்படியாக இவ்வூரில் சக்ரபாணிப் பெருமாள் ஸன்னிதி இருக்கிறது. சக்கரத்தாழ்வார் தனியாக எழுந்தருளி இருந்தாலும் எம்பெருமானின் திருக்கையில் எழுந்தருளி இருப்பதாகவே நினைக்க வேண்டும். அக்காரணம் பற்றியே சக்ரபாணிப் பெருமாள் ஸன்னிதி என்று வழங்கப்படுகிறது.

பதினெறும் பெற்ற பெருவாழ்வு :—பகவானுக்கு ஐந்து ஆயுதங்கள்; சக்கரத்தாழ்வாருக்குப் பதினெறு ஆயுதங்கள்! சக்கரம், ஈட்டி, கத்தி, கோடாரி, சதமுகாக்னி, மாவட்டி, தண்டம், சக்தி என்னும் எட்டு ஆயுதங்களே வலக்கையிலும், சங்கு, வில், கண்ணி, கலப்பை, உலக்கை, வஜ்ரம், சூலம் கதை ஆகிய எட்டு ஆயுதங்களேயும் இடக்கையில் அணிந்திருப்பார். ஸுதர்சனாழ்வான் இந்த ஆயுதங்களைத் தனக்கு அழகு ஏற்படுத்திக் கொள்வதற்காக அணிந்து கொள்ளவில்லை; அடியார்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை நீக்கி நன்மை செய்வதற்காகவே அணிந்து கொண்டிருக்கிறார்.

உறகலுறகலுறகல் :—உறங்காதே, உறங்காதே சிறிதும் உறங்காதே' இது பெரியோர்கள் சிறுவனுக்குக் கூறும் அறிவுரை அன்று. திருட்டுத் தொழில் நிறைந்த இந்நாளில் காவலர்கள் பொதுமக்களுக்குக் கூறும் அறிவுரையன்று. ஸன்னிதிகளிலும் திருமாங்களிலும் நடை பெறும் திருவாராதனக்ரமங்களில் பெருமாளுக்கு சயனதிவாஸமும் உண்டு; திருப்பள்ளி எழுச்சியும் உண்டு. 'பகவான் சயனித்துக் கொள்கிறான்; திருக்கண் வளரப் போகிறான் (உறங்கப்போகிறான்). பஞ்சாயுதங்களே! நீங்கள் விழிப்புடன் இருந்து எம்பெருமானுக்குத் திருமேனி காவல் தொழிலைச் செய்யுங்கள். நீங்கள் எப்போதுமே எம்பெருமானை

ரகழிப்பதில் ஊற்றமுடையவர்கள்; ஆயினும் பகவான் நித்ய ரையில் இருக்கும் போது மேலும் கவனமாக இருந்து உதவுங்கள் என்று பெரியாழ்வார் பிரார்த்திக்கிறார். முதலில் ஸுதர்சனும் வானையே கூறுகிறார்.

உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே
அறவெறி நாந்தக வாளே அழகிய சார்ங்கமேதண்டே
இறவுபடாமலிருந்த எண்மருலோக பாலீர்காள்
பறவை யறையா உறகல் பள்ளியறை குறிக்கொண்மின்.
பெரியாழ்வார் திருமொழி 5-2-9

ஆழிப்பிரானின் அன்பு ஆணை :— ஓ ஸுதர்சனுழ்வானே! நீர் எப்போதும் என்னுடைய திருக்கையில் இருப்பவர்! பகவானின் திருவுள்ளத்திற்கு ஏற்ப நடப்பவர். மிகவும் உயர்ந்தவர். பேரொளி கொண்டவர். நீர் அருளுடையவர்; விஜய ஸ்ரீயை நிலையாகப் பெற்றவர். உமக்கு எங்கும் வெற்றி; எப்போதுமே வெற்றி! உமது வலிமையோ அளவிடமுடியாதது. அடியார்களின் பகைவர்களை அழிக்கிறீர்; அவர்கள் வேண்டுவதை எல்லாம் கொடுக்கிறீர்! உலகில் மனக்குறை இல்லாத மனிதனே இல்லை. ஏதேனும் குறை இருந்தால்தான் என்னை நினைக்கிறான். பக்தியை உண்டாக்குகிறது குறை. பூச்சியுள்ள மாம்பழமே இனியபழம்!

மனிதன் குறைகளுள் மூன்று குறைகள் மேலோங்கி நிற்கின்றன. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மக்கள் ஆரோக்யத்தை விரும்புகிறார்கள்; ஆனால் ஆரோக்யமாக எவருமே வாழ முடியவில்லை. செல்வம் மதிப்பைத் தருகிறது. பொருளில்லாதவனுக்கு இவ்வுலகு இல்லை. பொருளில்லாதவன் தன் வாழ்க்கையையே வெறுத்துக் கொள்கிறான். 'இல்லாளை இல்லாளும் வேண்டாள்; மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள்'. சிலருக்கு ஆரோக்யம் இருக்கிறது; செல்வமும் உள்ளது. ஆனால் மனைப்பயனுக நீண்டநாள் வாழமுடியவில்லை; சுகத்தை அடையவேண்டிய காலம் நெருங்கிவரும் நேரத்தில் இறந்து விடுகிறான். திருவாழியே! உலக வாழ்க்கைக்கு முக்கியமாகத்

தேவைப்படும் ஆரோக்யம், ஐசுவர்யம், நீண்ட ஆயுள் ஆகியவற்றையே அனைவரும் என்னிடம் கேட்கருர்கள். கேட்டவர்களுக்கெலலாம் நான் அவற்றை சளைக்காமல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இனிமேல் உலகமக்களின் வாழ்க்கையை உம்மிடம் ஒப்படைக்கிறேன். நீரே இவற்றை மக்களுக்குக் கொடும். உம்முடைய பெருமை வானளாவி ஓங்கி எண்திசைகளிலும் பரவட்டும். இந்த முன்று பலன்கள் மட்டுமின்றி, மக்கள் மேலும் என்ன அபேக்ஷித்தாலும் உடனே கொடுத்து அவர்களைக் காப்பாற்றும்! என்று ஸுதர்சனாழ்வானுக்கு எம்பெருமான் ஆணையிட்டுச் சிலநாள் ஓய்வெடுத்துக் கொண்டு பிராட்டியோடு மகிழ்ந்திருக்கிறான் என்று ஸுதர்சனசதகம் கூறுகிறது.

ஓங்குக நின் புகழ் :—ஸுதர்சனாழ்வானே! நீர் பெருமாள் திருக்கையில் அமர்ந்தது போதும். திருவரங்கப் பெருமாள் அரையர் தேவப்பெருமாளிடம் இராமானுசனை வேண்டிப் பெற்றார். அதற்கும் முன்னதாக கௌசிகர் தயரதனிடம் இராமபிரானை வேண்டிப் பெற்று அழைத்துச் சென்றார். நாங்கள், அருட்கடலான ஸ்ரீமந் நாராயணனிடமிருந்து உம்மை வேண்டிப் பெற்றுள்ளோம். எம்பெருமானும், எங்களுக்குத் துணை நிற்குமாறு உம்மைப் பணித்துள்ளான். உமது புகழ் வேகமாகப் பரவுகிறது. காதம் பலவும் திரிந்துழன்று நிழலும் நீரும் தேடி ஓடியவர்களெல்லாம் உமது திருவடிவாரத்தில் வந்து நிற்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் ஸுதர்சன ஜபம், ஹோமம். எல்லா வீடுகளிலும் உமது திருவுருவப்படம்; யந்திரம்!

புறவிருளோடு அகவிருளை அழிப்பவரும் நீரே! மாலி என்னும் அசுரனை அழித்தீர்! வாமனன் திருக்கையில் பவித்திரமாக இருந்து சுக்ரன் கண்ணைக் கிளறினீர்! முதலையை அழித்துக் கஜேந்திரனை ரக்ஷித்தீர்! அம்பரீஷனுக்கு அருள் புரிந்தீர்! தொண்டை மன்னனுக்கு உதவினீர்! தொண்டர்களைக் காப்பாற்றுகிறீர்! தொண்டு செய்யும் தகுதியையும் நீரே தருகிறீர்! தகுதிக்கேற்றவாறு அறிவையும் வழங்குகிறீர்! அருளாழியே! இன்று போல் என்றும் அனைவர்க்கும் அருள் புரிந்திடுவீராக.

மங்கை மன்னனின் மடல்

மடல் என்பது தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். 'மடலின்மாக் கூறும் இடனுமாருண்டே' என்பது தொல்காப்பிய சூத்திரம். மடலேறுதல் என்றால் என்ன?

பனைமடல்களால் குதிரை வடிவாகச் செய்து, அதன் மீது இருந்து தன் காதலியின் உருவம் தீட்டிய கிழியை ஏந்தி ஊரறியத் துன்புறுதலே மடல் ஏறுதல் என்னும் அகப்பொருள் துறையாகக் கூறுவர்.

காதலனின் இந்நிலைக்குக் காரணம் யாது? தான் விரும்பிய நங்கை கிடைக்கப் பெறாமல் ஏமாற்றமடைந்து தன்னைத் தான் அழித்துக் கொள்ளும் அவனுடைய மன நிலையே இதற்குக் காரணம். மடல் ஏறித் துன்புறுவதைக் கூறுவது அல்லாமல், மடல் ஏற முயல்வதாகக் கூறுவதும் உண்டு. இம்முயற்சி ஆண்களுக்கே உரியது என்றும் பெண்களுக்கு ஏற்றதன்று என்றும் மரபு வகுத்தனர்.

மோஹனு திருமலை

கடலின்ன காமம் உழந்தும் மடலேறுப்
பெண்ணின் பெருந்தக்கது இல்

என்று திருவள்ளுவரும் கூறிப் போந்தார்.

ஆயின், நம் திருமங்கை ஆழ்வாரின் சிறிய திருமடல், பெரிய திருமடல் பாடல்களில் திகழும் அற்புதம் யாது?

சிராவேச் செங்கண் நெடியானைத் தேன்துழாய்த்
தாராளைத் தாமரைபோல் கண்ணனை எண்ணருஞ்சீர்ப்
பேராயிரமும் பிதற்றிப் பெருந்தெருவே
ஊரார் இகழிலும் ஊராது ஒழியேன்நான்
வாராய்பூம் பெண்ணை மடல்.

என்று 'பரகால நாயகி' மடலேறத் துணிகிறாள். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு முதலிய அருங்குணங்களைத் தன் அணிகலன்களாய்க் கொண்ட பெண் மடலேறத் துணிந்து

விட்டாளா? என்ன விந்தை இது! என்று நாம் வியக்கிறோம். ஆனால், இதற்கு ஆழ்வாரே, சமாதானமும் கூறுகிறார் தன் பெரிய திருமடலில்.

அன்ன நடையார் அலர்ஏச ஆடவர்மேல்
மன்னும் மடல்ஊரார் என்பதோர் வாசகமும்
தென்னுரைமிற் கேட்டறிவது உண்டு, அதனே யாம்தெளிவோம்
மன்னும் வடநெறியே வேண்டினேம்.....
உன்னி உலவா உலகறிய ஊர்வன்நான்
மூன்னி முளைத்தெழுந்த தோங்கி ஒளிபரந்த
மன்னியபூம் பெண்ணே மடல்.

பெண் மடலேறுதல் என்பது தமிழ் மரபுக்கு ஒவ்வாது எனினும் வடமொழி மரபினை விரும்புகின்றேன். அதனால் மடல் ஊர்வேன் என்று விளக்குகிறார்

எனவே, நம் மங்கை மன்னனின் காலத்திலிருந்து தான் பெண் மடலேறுர் என்ற விதிக்கு விலக்குஏற்பட்டது. பெண் மடல் ஏறுவதாய் முதன் முதல் இலக்கியம் படைத்தவர் நம் மங்கைமன்னனே! அவரது சிறியதிருமடல், பெரியதிருமடல் பாடல்களில் ஸர்வேச்வரனை எம்பெருமானை நாயகனாகக் கொண்டதால் 'பரகால நாயகி' மடலேறத் துணிகிறாள். அதனால்

மடல்மாப் பெண்டிர் ஏருர் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே

என்று விதி சமைத்தது பன்னிரு பாட்டியல். மடல் என்னும் இப்பாடலைப் பாடுவோர் வெண்கலிப்பா என்னும் செய்யுள் வகையால் பாடுதலை மரபாகக் கொண்டனர்.

நம் திருமங்கை ஆழ்வாரின் சிறிய திருமடல், பெரிய திருமடல் பாடல்கள் எளிய, இனிய நடையில் காதலியின் துன்பத்தைக் கற்போரும் உணர்ந்து உருகும் வண்ணம் அமைந்துள்ளன. அவை பயிலுந்தோறும் தெவிட்டா இன்பந்தர வல்லன. ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் உணர்ந்து ஓதிப் பயனடைதல் வேண்டும்!

மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே!

பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களால் அறிய முடியாத விஷயங்களையெல்லாம், பிரமாணங்களில் சிறந்த தான 'ச்ருதி' பிரகாசப் படுத்திக் காட்டிக் கொடுக்கிற படியினாலே, அதற்கு வேதம் என்று பெயரிட்டு வழங்கி வந்தனர்.

அங்ஙனம் வெளிப்படுத்திக் காட்டிக் கொடுக்காமல் மறைத்துக் கொள்ளவும் செய்கிற படியினாலே, அதை மறை என்றும் பெயரிட்டு வழங்கி வந்தனர்.

ஆகவே, வேதம் என்ற சொல்லுக்கு, வெளிப்படுகிறது என்று பொருள். மறை என்ற சொல்லுக்கு, மறைக்கிறது என்று பொருள் என்று கூறுவர் பெரியோர்.

மதுரை—மா. செல்லப் பெருமாள் கோன்

மேலும், அது யாருக்கு வெளிப்படுத்திக் காட்டிக் கொடுக்கிறது? யாருக்கு வெளிப்படுத்திக் காட்டி கொடுக்காமல் மறைக்கிறது. ஏன்? எதனால் என்பதைக் கீழே காண்போம்.

மறையாகிய நான்கு வேதங்களும், யாரைப் பரம் பொருள் என எடுத்துக் காட்டி வெளியிட்டுப் பிரகாசப் படுத்திக் காட்டுகிறது. என்பதை; அதன் வாயிலாகவே அறிந்து தெளிந்து, அது காட்டும் வழி நின்றொழுகி, உய்வு பெற வேண்டும் எனக் கருதி; அதனிடம் பக்தி ஸ்ரத்தை யுடனும் பணிவுடனும் அணுகியவர்களாகிய ஸ்ரீவைஷ்ணவ மதாசார்யர்களுக்கு; "இவ்வண்ட பிண்ட சராசரம் அத்தனையும், தன் சரீரமாகக் கொண்டு சரீரியாகத்

நிகழ்ந்து நிற்கும் ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள்'' என வேதம் வெளியிட்டுப் பிரகாசப்படுத்திக் காட்டியது. ஆகு, இச்சீரிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசார்யர்களால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டதுதான் விசிஷ்டாத்வைத சித்தாந்தமாகும்.

இச்சீரிய கருத்தை, ''மறையாய நால் வேதத்துள் நின்ற மலர்ச் சுடரே!'' என எடுத்துக் காட்டி நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இங்ஙனமே மற்றைய ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அருளிச் செய்து தெளிவு படுத்தியுள்ளனர்.

மேலும், வேதம் யாருக்கு வெளிப் படுத்திக்காட்டாமல் மறைக்கிறது என்பதைக் கீழே காண்போம்.

வேதத்தில் கூறப்பட்டுள்ள பிரமன், சிவன், இந்திரன் போன்ற தேவதைகளை; ஆளுக்கு ஒன்றாகத் தூக்கி எடுத்துப் பிடித்துக் கொண்டு, அத்தேவதைகளே பரம்பொருள் தத்துவத்துக்குப் பொருந்தக் காட்டுவான் வேண்டி, வேதத்தின் கண் ஏதும் ஆதாரம் கிடைக்குமா என்பதைத் துருவித்துழாவிக் கண்டு கொள்வான் வேண்டியே வேதந் தன்பால் அணுகிய; சைவமதாசார்களுக்கும், அத்வைத மதாசார்யர்களுக்கும்; ஸ்ரீமந் நாராயணனே பரம் பொருள்'' எனும் உண்மைப் பொருளை வெளிப் படுத்திக் காட்டாமல் மறைத்துக் கொண்டு விட்டது வேதம்.

மேலும், அவர்கள் தூக்கிப் பிடித்துக் கொண்டு வந்துள்ள தேவதைகளையே பரம்பொருள் என எடுத்துக் காட்டுவது போன்ற மயக்கத்தின் பாற்படும்படி செய்து விட்டது வேதம்.

அம்மயக்கத்தினின்று மீளவியலாத அவர்களில் ஒருவர் சிவன் தான் பரம்பொருள் என வேதம் கூறுகின்றது என்று

கூறிச் சாதிக்கிறார். மற்றொருவர், அதை மறுத்துப் பராசக்தி தான் பரம்பொருள் என வேதம் கூறுகின்றது என்று கூறிச் சாதிக்கின்றார். மற்றொருவர், அவர்கள் இருவர் கூறியதையுமே மறுத்துப் பிரமன்தான் பரம்பொருள் என வேதம் கூறுகின்றது என்று கூறிச் சாதிக்கின்றார் மற்றொருவர். அவர்கள் மூவர் கூறியதையுமே மறுத்து விநாயகர்தான் பரம்பொருள் என வேதம் கூறுகின்றது என்று கூறிச் சாதிக்கின்றார் மற்றொருவர், அவர்கள் நால்வர் கூறியதையுமே மறுத்து முருகன் தான் பரம் பொருள் என வேதம் கூறுகின்றது என்று கூறிச் சாதிக்கின்றார்.

இங்ஙனே, சைவ அத்வைத சித்தாந்திகள், சிவனுரின் குடும்பத்தினர் அனைவரையுமே பரம்பொருள் என்று கூறி; அவர்கள் அனைவரையுமே மயக்கத்தின்பாற்படுத் நித்திக்கு முக்காடச் செய்கின்றனர். அம்மயக்கத்தினின்று அத் தேவதைகளும் மீளவியலாது. ஒவ்வொருவரும் தாம் தாம் தான் பரம்பொருள் போலும் என்று எண்ணி ஏங்கிக் கிடக் கின்றனர். இச் சித்தாந்திகளும் பிடி சாதனையாக அத் தேவதைகளுக்கே பரத்வத்தை ஏற்றி நிறுத்தி சாதிக் கின்றனர். இங்ஙனம் இவர்கள் கண்டதைத் தான் சைவ சித்தாந்தம், அத்வைத சித்தாந்தம் என்று கூறப்படுகிறது.

அண்ட பிண்ட சராசரம் அத்தனையும் ஸ்ரீமத் நாராயணனுடைய சரீரம் என்று வேதம் கூறுவதால், நீங்கள் கைக் கொண்டுள்ள தேவதைகளெல்லாம் அவனு டைய சரீரத்தின் அங்கங்களே தவிர; அவைகளுக்குத் தனித் தன்மையோ, தலைமைத் தனமையோ கிடையாது. ஆகவே, அவர்கள் பரம்பொருள் ஆகமுடியாது என்ற உண்மைப் பொருளை; ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத சித்தாந்தி கள் எடுத்துக் காட்டி விளக்கிக் கூறினும், அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை, தாங்கள் பிடித்த பிடியிலேயே நின்று சாதிக்கின்றனர்.

இவர்களின் இப்போக்கினை எடுத்துக்காட்டு ஒன்றினைக் கொண்டு கண்டு தெளிவு பெறுவோம்.

கண்ணொளி பிரகாசமாகவுள்ள ஒருவனிடம், அந்தகர் சிலர் யானையைக் காணப் பெரிதும் விரும்பி அதனைக் காட்டிக் கொடுக்கும்படி வேண்டினர். அவனும் அவர்களை யானை இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று, இது தான் யானை அதனை நன்முகக் கைகளால் தொட்டுத் தடவிப் பார்த்து உணர்ந்து அறிந்து கொள்ளுங்கள் என்று கூறி; அந்த யானையின் பக்கலில் நெருக்கமாகக் கொண்டு நிறுத்தினான்.

அவர்களில் ஒருவன், யானையின் முகப்பாகிய துதிக்கை யைத் தொட்டுத் தடவித் தடவிப் பார்த்தான். மற்றொரு வன், அதன் காதைத் தொட்டுத் தடவித் தடவிப் பார்த் தான் மற்றொருவன், அதன் காலைத் தொட்டுத் தடவிப் பார்த்தான். மற்றொருவன், அதன் வயிற்றைத் தொட்டுத் தடவித் தடவிப் பார்த்தான். மற்றொருவன், அதன் வயிற்றின் மேற் பகுதியைத் தொட்டுத் தடவித் தடவிப் பார்த்தான். மற்றொருவன், அதன் வாலைத் தொட்டு தடவித் தடவிப் பார்த்தான்.

அவ்வளவுதான் அவர்கள் தம்தம் கைகளால் அதனைத் தொட்டுத் தடவிப்பார்த்து உணர்ந்து அறிந்துகொண்டது. ஆக, அவர்கள் அங்குனின்றும் மீண்டும் தங்கள் இருப்பிடத் திற்குச் சென்று சேர்ந்ததும்; தாங்கள் தொட்டுத் தடவிப் பார்த்து உணர்ந்து அறிந்து கொண்ட யானையின் உருவைப் பற்றிய, தம்தம் கருத்தினைப் பரிமாற்றம் செய்து கொண்டனர். எங்ஙனம்? யெனின்,

அவர்களில் யானையின் துதிக்கையைத் தொட்டுத் தடவிப் பார்த்தவன், யானை உலக்கை போன்றது என்று

கூறிச் சாதித்தான். அதன் காதைத் தொட்டுத் தடவிப் பார்த்தவன் அதை மறுத்து, யானை முறம் போன்றது என்று கூறிச் சாதித்தான். அதன் காலைத் தொட்டுத் தடவிப் பார்த்தவன் அவ்விருவர் கூறியதையுமே மறுத்து, யானை தூண் போன்றது என்று கூறிச்சாதித்தான். அதன் வயிற்றைத் தொட்டுத் தடவிப் பார்த்தவன் அம்மூவர் கூறியதையுமே மறுத்து, யானை சால்போன்றது என்று கூறிச் சாதித்தான். வயிற்றுக்குமேல் புறத்தைத் தடவிப் பார்த்தவன் அந்நால்வர் கூற்றையுமே மறுத்து, யானை சுவர் போன்றது என்று கூறிச்சாதித்தான். அதன் வாலைத் தொட்டுத் தடவிப்பார்த்தவன் அவ்ஐவர் கூறியதையுமே மறுத்து, யானை ஒட்டடைக் குச்சி போன்றது என்று கூறிச் சாதித்தான்.

இங்ஙனம், யானை என்பது எப்படிப்பட்டது என்பதைப் பற்றிய கருத்து வேற்றுமையை; அந்தகர்கள் ஒருவருடன் ஒருவர் சொற்போரிட்டுத் தாம்தாம் கண்ட கருத்தையே கூறிச்சாதித்து, முடிவின்றி வழக்காடிக் கொண்டிருப்பதை, அவர்கள் பக்கலிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த கண்ணொளி பிரகாசமாகவுள்ள அம்மனிதன், அவர்களை அமைதிப்படுத்தி அவர்களிடம்;

அன்பர்களே! யானையைப்பற்றி நீங்கள் யாவர் கூறுவதும் உண்மையே ஆயின், நீங்கள் கூறும் ஒவ்வொன்றும் யானை என்பதின் சரீரத்தைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கங்களே என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று கூறி, மேலும் விவரமாக; தூண்போன்ற நான்கு கால்களையும், சால்போன்ற பெரிய வயிற்றையும், சுவர்போன்ற அகன்ற முதுகையும், உலக்கைபோன்ற நீண்ட துதிக்கையையும், முறம்போன்ற அகன்ற இருகாதுகளையுமுடைய பெரும் தலையையும், ஒட்டடைக்குச்சி போன்ற வாலையும் அங்கங்களாகக் கொண்ட பெரும் உருவமுடையதே யானை என்று விளக்கமாகக் கூறித் தெளிவுபடுத்தினான். ஆயினும், அவ்

வுண்மைக் கருத்தை அத்தகர்கள் ஏற்றுக்கொள்ளாது மறுத்துவிட்டனர். மேலும் தாம்தாம் தடவிப்பார்த்துக் கண்டு கொண்டதே சரியானது என்று கூறிச் சாதித்தனர்.

ஆக இங்ஙனம், அத்தகர்கள் யானையின் அங்கங்களில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் தனித்தனியே தடவிப் பார்த்து; அங்ஙனம் அவரவர்கள் தடவிப்பார்த்துக் கண்ட ஒவ்வொரு அங்கம் போன்றதே யானை, என்று கூறிச் சாதிப்பதையும்,

சைவ சித்தாந்திகளும், அத்வைத சித்தாந்திகளும் சிவனுடின் குடும்பத்தினர் அனைவரையும்; ஒவ்வொருவர் ஒவ்வொருவரை எடுத்துக்காட்டி அவ்வவர்தான் பரம் பொருள் என்றுவேதம் கூறுகிறது என்று கூறிச் சாதிப் பதையும்,

ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத சித்தாந்திகள், சிவனுடின் குடும்பத்தினர் உட்பட; அண்டபிண்ட சராசரம் அத்துணையையும் சரீரமாகக் கொண்ட சரீரியாகிய, ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற்பொருள் என்று வேதம் அறுதி யிட்டுக் கூறுகின்றது என்று கூறிச்சாதிப்பதையும் ஒப்பிட்டு நோக்கி உண்மையான உறுதிப்பொருளைக் கண்டு கொள்க.

ஆக, எவர் எப்படியிருப்பினும் ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நாம்; ஆழ்வார்கள் ஆசார்யர்கள் நால்வேதத்தினுள்ளும் கண்டு எடுத்துக்காட்டிப் பிரகாசப்படுத்தியுள்ள, "மறையாய நால்வேதத்துள் நிற்கும் மலர்ச்சுடர் ஸ்ரீமந் நாராயணனே" எனக் கண்டுகொள்வோமாக.

ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் சீரிய செந்நெறி நின்றொழுகி, ஸ்ரீவைஷ்ணவர்களாக, மறந்தும் புறந்தொழா மாந்தர்களாக வாழ்வாங்கு வாழ்ந்து உயர்வு பெறுவோமாக.

திருத்திக்காட்டுவதை
தியதாக நினையார் பெரியார்

(வித்வான்களுக்கு விளக்கம்)

ஊருணியில் நீர் நிறைந்திருந்தால் அனைத்துயிரினங்களுக்கும் பாகுபாடின்றிப் பயன்படுவது போல அறிவு, புலமை, படிப்பு ஒருவரிடம் நிறைந்திருந்தால் அதனை அவர்கள் பாகுபாடின்றி எல்லாத்தரப்பு மக்களுக்கும் பயன்படும் வகையில் பயன்படுத்த வேண்டும். அதில்தான் அவர்கள் திறமை, புலமை சாமர்த்யம் உள்ளது. அதைத்தானே உலகப் பொதுமறையாம் திருக்குறளும் கூறுகின்றது:

மதுரகவி அண்ணுவியார், ஆழ்வார் திருநகரி.

ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு —என்று

தாழ்வுற்றவரையும் மேன்மையடையச் செய்யும் தகைமை உடையதுதான் உடையவரின் (ஸ்வாமி எம்பெருமானரின்) திருவுள்ளம். இதை உடையவர்கள் (உபந்யாசகர்கள்) உணரவேண்டும் என்ற எண்ணத்தில் அடியேன் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தில் ஒரு கட்டுரை எழுதினேன். சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினே என்று சொன்னேன். சிறுகின்றனர் சொற்பொழிவாளர் சிலர். நிராதகோபம் யாருக்கு லாபம்? இது யாரிட்ட சாபம்? வைணவத்துக்கு ஏன் இந்தப்பரிதாபம்?

"ஐயைந்தும் ஐந்தும் (திருப்பாவை) அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு" என்றார் நம் பெரியோர். புரிந்தால்தானே அறிவான்? புரியும்படி சொன்னால்தானே! பாசுரங்கள் பைந்தமிழில் பாடப்

பட்டுள்ளன. உரைகளே விளக்கும்போது மட்டும் மிகுதியான வட சொற்களைக் கலந்து கடுமையாக்கிக் குழப்பக்காரணம் என்ன? படித்தவர்களுக்கு மட்டும் புரிந்தால் போதுமா, பாமரர்களுக்கு புரியவேண்டாமா? ''எளிமை என்பது எல்லோரும் கொண்டது'' என்பது அறிக.

சித்து, அசித்து, ஈச்வரன், அகாரம், உகாரம், மகாரம், ப்ரமாணம், ப்ரமேயம், ப்ரமாதா ப்ராபகம், ப்ராப்யம், சேஷி, சேஷன், சேஷபாவம் என்றிப்படி அடுக்கிக்கொண்டே போனால் அந்தோ பரிதாபம்! அரங்கிலே அமர்ந்திருப்போர் பெரும்பாலோர் வடமொழி அறிந்தவர்கள் அல்ல! இதை உணராமல் ஆரம்பப்பள்ளி மாணவர்களிடத்தில் Ph. D. வகுப்புநடத்தும் முறை கண்டு, உபந்யாஸங்களில் குறை கண்டு முறையிட்டேன். எனது உள்மனத்தின் உளறல்கள் உணர்ச்சிப்ரவாகமாக, வார்த்தைகளாகவந்து விழுகின்றன. பாமரஜனங்களின் ஒட்டுமொத்தமான பிரதிநிதியாக அடியேன் (ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ தர்சனம் 430ல்)எழுதியவையே அக்கருத்துக்கள்.

வடமொழியைப் பழிக்கவோ, அழிக்கவோ, ஒழிக்கவோ வேண்டும் என்பது என் எண்ணம் அல்ல. அடியேனே வடமொழியில் துதிப்பவன்தான். வடமொழியை மதிப்பவன் தான். 'மொழிவெறுப்பு விழிஇழப்பு' என்ற கொள்கை யுடையவன். வடமொழியில் கவிபாடும் அடியேன் மற்றவர் களுக்கும் புரியவேண்டும் என்பதே என் எண்ணம். மொழிக் கலப்பால் வரும் தனிச்சுவையை நான் வெறுப்பவன் அல்ல என்பதும் நினைவம்.

நம் ஸம்ப்ரதாய வித்வான்கள் தற்கால நிலையை உணர வேண்டும். ஸம்ப்ரதாயக் கருத்துக்களே அறிந்து கொள்ள முடியாமல் தெரிந்து கொள்ளமுடியாமல் புரிந்து கொள்ள முடியாமல் இளைஞர்கள் ஒதுங்குகிறார்கள். எனவே இன்ய

தலைமுறையை இளைஞர் சமுதாயத்தை வைணவ உலகம் இழந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இதை அடியேன் உணர்ந்தால் போதுமா? உபந்யாசகர்களும் உணரவேண்டிய தருணம் இது! உபந்யாசகர்களே! உங்கள் உபந்யாசங்களை எளிமைப்படுத்துங்கள்! இதுவே என் வேண்டுகோள்.

எளிமை என்னில் வடமொழிச்சொற்களுக்கு பதிலாக தமிழில் சொற்களை உபயோகியுங்கள். இன்றேல் தமிழில் விளக்கமாவது தாருங்கள். அதாவது சேஷி—தலைவன், சேஷன்-அடிமை, ஸ்ரீய: பதி-திருமால், சித்து—உயிருள்ளது அசித்து—உயிரற்றது, ஸ்வாபதேசம்—உள்ளுறைபொருள் உபாயம்—வழி என்றிப்படி ஒவ்வொருமுறையும் விளக்கம் தாருங்கள்.

ஆழ்வார்கள் தங்களைத் தமிழராகக் கூறிக் கொண்டே பெருமிதம் எய்தினர்.

பெருந்தமிழன் என்றும் தமிழ்த்தலைவன் என்றும் இருந் தமிழ்நூற்புலவன் என்றும் அருளியுள்ளமை காண்க. எண்டிசை யும் அறிய இயம்புகேன் ஒண்தமிழ்ச்சடகோபன் அருளையே என்றார் மதுரகவியாழ்வாரும். "செந்நிறத்ததமிழோசை நிசை நான்கிலும் திங்கள் நாயிறுகி ஒளிவீசி ஒலிகொடுத் தார் பரகாலன் தம் பைந்தமிழில்.

மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனிகளும் அந்தமிழால் நற்றலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் அருளிச் செயலை ஏற்பாரும் உய்யப் பரப்ப பாரித்தார். செய்ய தமிழ் மாலைகளினுல் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றேமே" என்றார் வித்தகவல் வேதாந்த தேசிகனும்.

இப்படியிருக்க, தமிழ்ப்பாசுரங்களுக்கு வடமொழிச் சொற்களையே கலந்து விளக்கம்தரும் போக்கு கண்டு வெதும்பியிருக்கும் என் இதயத்தின் வேதனைச் சிதறலையே எழுத்துக்களாய் கண்ணீரில் கட்டுரையாய் வடிக்கிறேன்.

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற அவ்வெம்பெருமான் தானே, ஆதியஞ்சோதி உருவை அங்குவைத்து இங்குப்பிறந் தான். உயர்வற உயர்நலமுடைய அவ்வெம்பெருமானே பத்துடை அடியவர்கட்கு எளிவரும் இயல்வினனுகத் தாழ விட்டுக் கொண்டான்—எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்த தன் மூலம் அதேபோல் எம்பெருமானேயே சொல்ல வந்த வேதமும், எம்பெருமான் தாழப் பிறந்ததுபோல், தானும் இராமாயணமாகவும், பாரதமாகவும், திவ்ய ப்ரபந்தமாக வும் தாழவிட்டுக் கொண்டது. அதனைப் பின்பற்றி உபந் யாசகர்களும் கேட்பவர்களுடைய சக்தியை உணர்ந்து சற்று இறங்கி வந்து மனமிரங்கி வந்து உபந்யாஸங்களை எளிமைப்படுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரையின் கருத்து.

திருத்திக்காட்டுவதை நியதாய் நினையார் பெரியார். திருந்தட்டும் தவறு, வருந்தட்டும் உள்ளம், பொருந்தட்டும் உண்மைநிலை.

உபந்யாசகர்களே! உங்களுக்குள் உறையும் அவனே அடியேனுக்கும உள்ளுறைபவனுய் வைணவ நெறியை வளப்படுத்த இப்படி எழுத நியமிக்கிருன்.

என்வாய் முதலப்பனும் ஆழ்வாரப்பன் என் நா முதல் வந்து புகுந்து சொல்லிய இவ்வுரைக்கு இப்போது இத்துடன் நிரையிடுகிறேன்.

[சிந்தனையைத் தூண்டும் இக்கட்டுரையைப் பற்றி வாசகர்களிலுடையவும் உபந்யாசகர்களுடையவும் கருத் துக்களை வரவேற்கிறோம். —ஆசிரியர்]

ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

"இதற்குமுன் மோக்ஷோபாயங்களாக என்னால் விவரிக்கப்பட்ட கர்மஞான பக்திகள் யாவற்றையும் முற்றவுமாக விட்டுவிட்டு என்னையே மோக்ஷோபாயமாகப் பற்று" என்று விதிக்கிறான் கீதாசார்யன் சரமச்லோகத்தின் முதல்பாதியில். உபாயவரணம் ஒரு தடவைதான் மறுபடிகூடாது. ஆனால் பற்றியதில் ஆழ்ந்த நம்பிக்கை (மஹாவிச்வாஸம்) அவசியம். "மறவாமல் வாழுதியேல் வாழலாம்"—உபாயவரணம் ஒரு தடவைதான் பற்றுவது; அவன் நம்மைக் கட்டாயம் ரக்ஷிப்பான்—என்பதை மறக்கக் கூடாது. இங்கு விதிக்கப்பட்டதே த்வயமத்ரத்தில் பிற்கூற்றான கைங்கர்ய ப்ரார்த்தனைக்கும் சரமச்லோகத்தின் பிற்கூற்றான சரண்ய வசநத்துக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. "உன்னை வாழ்விக்கிறேன்" என்று சரண்யனை ஸ்ரீபார்த்தஸாரதி ஆணையிட்டுத்தருகிறான் இங்கு.

இந்தச்லோகத்தில் முற்கூற்று அதிகாரிக்ருத்யத்தைச் (பற்றுமவனுடைய செயலை) சொல்லிற்று. பிற்கூற்று சரண்ய க்ருத்யத்தைச் (பற்றப்படுவனுடைய செயலை) சொல்லுகிறது. இதைத்தான் கீதோபநிஷதாசார்யன் "அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ப்ரதிஜ்ஞை பண்ணித் தருகிறான். இந்த சொற்களின் பொருளை விவரிப்போம்.

அஹம்—நான். "ஸர்வஜ்ஞனும், ஸர்வசக்தியாய் ப்ராப்தனான நான்" என்று இதற்குப் பொருள் அருளுகிறார்

உலகாரியன். எல்லாமறிந்தவன்; எல்லையற்ற சக்திபடைத்தவன்: ஸ்வாமியாகையால் ப்ராப்தன் (அடையத்தகுந்தவன்); இப்படிப்பட்ட தன்னே அறம் என்கிருன். எத்தனேயோ குணங்கள் எண்ணற்றதாய் இருக்க சில குணங்களே மட்டும் முக்யமாக இங்கு (அஹம் சப்தார்த்தமாகக் காட்டுவதற்கு அபிப்ராயம்—இவனுடைய முன் நிலேயையும் (பற்றுவதற்குமுன்) இனிமேல் போகுத்தக்க வழியையும் அறியவேணும். அறிந்து அதைத் (வேண்டாததை விலக்கி வேண்டியதைச் செய்து வைத்தல்) தலேக் கட்டுகைக்கு சக்தி வேணும் செய்யுமிடத்து, செய்தது தனக்காகவே (சேதனனுக்காகவல்ல) செய்யும் உறவு வேண்டும் சேதனனே அடைந்து அநுபவிப்பவன் ப்ராப்த சேஷி எனப்படுகிருன்.

மாம் என்ற விடத்து பற்றுவதற்குடலான சில (வாத்ஸல்யம் ஸௌலப்யம் முதலிய) குணங்கள் விளங்கினுற் போலவே அறம் என்ற இவ்விடத்தும் கார்யம் செய்துத் தலேக்கட்ட வல்லமைக்குச் சேர ஞானசக்தி முதலான குணங்கள் விளங்குகின்றன. இவன் ஒருவனே குணபூர்ணன் என்ற பூர்த்தி சொல்லத் தேவையில்லே.

ஸாரதியாய் நின்ற பாரதந்தர்யம் மாம்-ல் விசதம் அதற்கெதிர்த்தட்டான ஸ்வாதந்த்ர்யம் அறம்-ல் விளங்குகிறது. பாரதந்தர்யம் நமக்கு இயல்பு (ஸ்வரூபம்) பரமபுருஷன் தனது உயர்ந்த குணமடியாக இதை ஏறிட்டுக் கொள்கிருன் தன்னே அடைந்த அர்ஜுனனுக்குக் கையாளாக நின்றது அவனது உயர்ந்த குணத்தின் செயல். அதையிட்டு அவனேப்பாராமல் 'நமது தேரோட்டிதானே'' என்று பார்த்து, ''இவன் எல்லாதர்மங்களேயும் விட்டு என்னேப் பற்று'' என்கிருனே—இது எப்படி பொருந்தும்? என்ற ஐயம் தீர தன் பெருமையெல்லாம் தெரியும்படி அஹம் எல்லாமறிந்து ஸர்வவல்லமை படைத்த நான்—என்கிருன்.

இவன் ஏறிட்டுக்கொள்ளும் பாரதந்த்ர்யம் இவனுடைய இயல்பான (ஸ்வாபாவிகமான) ஸ்வாதந்த்ர்யத்தின் எல்லை நிலமென அறியவேண்டும்.

இனி த்வா—உன்னை. 'த்வா' என்பது 'அஹம்' என்பதற்கு நேர் எதிர்பதமாகும். "அஜ்ஞனுய், அசக்தனுய், அபராப்தனுய், என்னையே உபாயமாகப் பற்றியிருக்கிற உன்னை" என்று இதற்குப் பொருள் அருளுகிறார் லோகதேசிகன். "உனக்கு நலம் பயப்பது எது" என்று அறியாத அஜ்ஞனன உன்னை; அப்படி அறிந்தாலும் அதைச் செய்துத் தலைக்கட்ட இயலாத அசக்தனன உன்னை; உன் ரக்ஷணத்திலே (கட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள இயலாததால்) ப்ராப்தியில்லாத உன்னை, இக்காரணங்களால் எவனையே (இந்த உபாயங்களைப் பூராவாகநந்துறந்து) உபாயமாகப் பற்றியுள்ள உன்னை. என்னையடைய வொட்டாமல் தடுப்பவை என்று எந்த பாபங்களை எண்ணியுள்ளாயோ அந்தபாபங்களிலின்றும் விடுதலையடையப் பண்ணுகிறேன் என்று சபதமிட்டுத்தருகிறான் மேலே. ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி—என்று.

பாபம் என்பது யாது? இஷ்டப்ராப்தியான பகவல் லாபத்தை அடையவொட்டாமல் தடுப்பது பாபம். முக்கியமாக "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்" என்று ஆழ்வார் ஸாதித்துள்ளபடி, அசேதநமான தேஹமே ஆத்மா என்ற பொய்யான அறிவு, இந்தத்தவறான அறிவடியாகவரும் செயல்கள் இச்செயல்களின் பலனுய் வரும் (தாழ்ந்ததான) சரீர ஸம்பந்தமும் இவையாவையும் பாபங்களாகச் சொல்லப்பட்டன. புண்யமும் மோக்ஷத்துக்கு உதவாதாகையால் அதையும் பாபகோடியில் சேர்க்கவேண்டியதே. தெரிந்தும் தெரியாமலும் செய்யப்படும் கருமங்கள் யாவையும் பாபசப்தத்தால் சொல்லப்பட்டன. ஒரே தடவை பண்ணவேண்டிய

ப்ரபத்தியை அறியாதே கலங்கி ஒரு பலனை உத்தேசித்து மறுபடியும் பண்ணுவதும் பாபமே. (முன்பு பண்ணிய ப்ரபத்தியை மறுபடி நினைப்பது பாபமன்று அதை மறுபடி மறுபடி நினைத்தல் நலம்.)

"எல்லாவிதமான பாபங்களில் நின்றும் உன்னை விடு பட்டவனைப் பண்ணக்கடவேன்" என்கிறான் மோக்ஷயிஷ் யாமி என்று. "உன் பாபங்களைத் தொலைக்கிறேன்" என்னுமல் உன்பாபங்களினின்றும் விடப் பட்டவனும் படி பண்ணக்கடவேன் என்கையால் நீ என்னைப் பணிந்த ப்ரபாவத்தால் பாபங்கள் தன்னடையே விலகும் என்று சொன்னதாயிற்று. பாபம் என்பது ஒரு பொருள் அன்றே; நமது செயல்களினால் எம்பெருமான் திருவுள்ளத்தில் ஏற்படும் நிக்ரஹமே (displeasure) பாபம். அவன் ஸர்வஜ்ஞனாகையால் உரிய காலத்தில் நிக்ரஹபலம் கிடைக்கப் பண்ணுகிறான். நம்மிடம் அனுக்ரஹம் உண்டானவாறே நிக்ரஹம் தன்னடையே மறைந்து விடுமல்லவா?

அநாதிகாலமாக "நம் நலனுக்கு நாமே கடவோம்" என்று நாமிருந்த படியால் பகவான், "இவன் காரியத்தை இவனே செய்து கொள்ளட்டும்" என்று உதாஸீனனாயிருந் தான். ஆத்மா பகவச்சரீரம்; ஆகையால் அவனின் பொருள் என்றறிந்து, அவன் சரீரத்தைப் பேணவேண்டியவன் அவனே என்று ரக்ஷணத்தை அவனிடம் விட்டுவிட்டால், சரீரமான ஜீவனின் அவித்யை முதலான தோஷங்களை தன்னுடம்பில் அழுக்கைப் போக்குவது போல போக்கி விடுவான். இதைச் சொல்வதே மோக்ஷயிஷ்யாமி என்பதன் கருத்து.

இவி மாசுச:—உனக்கு வருந்த இடமில்லை.

(தொடரும்)

ஸ்ரீ ராமானுஜர் வரலாறு

18. பிரபந்த பாணம்

மதமாற்றம் என்பது ஸ்ரீராமானுஜ சித்தாந்தத்தில் தற்கால முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்டது. பணத்தைக் கொடுத்தோ, பள்ளிக்கூடங்களைக் கட்டியோ மருத்துவ வசதிகளையளித்தோ ஸ்ரீ ராமானுஜர் மதமாற்றம் செய்ய வில்லை. ஏதாவது ஒருவித லஞ்சத்தைக் கொடுத்தோ லோகாயத விஷயங்களில் ஆசைகாட்டியோ எவரையும் ஸ்ரீராமானுஜர் தமதுமதத்திற்கு இழுக்கவில்லை. மத மாற்றம் என்பது மனமாற்றம் என்று ராமானுஜர் கருதினார். ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை எடுத்துச் சொல்ல வேணும். அதில் ஆசைப்படுப்வர்கள் தாமாகவே வந்து சேர வேணும் என்பது ஸ்ரீராமானுஜர் கருத்து. அப்படி சித்தாந்தத்தைச்

சொல்வதற்கும் அவர் சந்திசந்தியாகப்போய் நின்று கொண்டு இரைந்து பாடியும் கூவியும் யாரையும் அழைக்க வில்லை. அவர் சித்தாந்தப்பிரசாரம் செய்யும் இடங்களில் மக்கள் தாமாகவே திரண்டார்கள். அவர்வழி நல்லதென மனதில் ஊன்றியவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களானார்கள். இந்த மதமாற்றத்தில் ஜாதி பேதம் இடையாது ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தில் சகலரும் சமம் என்ற கொள்கையைப் பரப்பினார்; அனுஷ்டித்தும் காட்டினார். அதனால் மக்கள் பெருவாரியாக ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் சேர்ந்தார்கள்.

இத்தகைய மதமாற்றத்தில், அதாவது மனமாற்றத் தில் ஸ்ரீராமானுஜர் யாரையும் வலுச்சண்டைக்கு இழுத்த தில்லை வாதத்துக்கு வா என்று மார்தட்டியதில்லை. அகங்காரத்துக்கு சித்தாந்தத்தில் இடமில்லை என்று நினைத் தார். தாமாக வலுவில் வந்தவர்களோடு வாதம் செய்தார். அதுவும் எம்பெருமானை நினைத்து அவர்மேல் பொறுப்பை சுமத்தி வாதம் செய்தார். அவருக்குக் கிட்டிய வெற்றிகள் பல. அவர் வாதிக்கும் போது எம்பெருமான் வாதிக்கிறான்

எம்பெருமானுர் வாதிக்கிறாரா என்று விளங்காத அளவுக்கு வாதத்தில் வேகமும் அமைதியும் கலந்திருந்தன. இப்படியாக சுருதி வாக்கியங்களினுலும் திவ்யப்பிரபந்த சூக்திகளினுலும் ஸ்ரீராமானுஜர் மதமாற்றம்-மனமாற்றம் செய்தார்.

இந்த வழியைத்தான் பெரிய திருமலைநம்பியும் கோவிந்தனைத் திருத்தி ஸ்ரீவைஷ்ணவத்துக்குச் சேர்ப்பதில் கையாண்டார். திருக்காளத்திக்கு அவர் செய்த முதல் பயணத்தில் கோவிந்தன் மனத்தில் ஒரு பாசுரவித்தை ஊன்றிவிட்டுவந்தார். இரண்டாவது முறையும் சில நாட்கள் கழித்து பெரிய திருமலைநம்பி காளத்திக்குச் சென்ருர். அந்தப்பயணத்தைப் பற்றியும் அவருடன் சென்ற பிராம்மணேந்தமர் ஸ்ரீராமானுஜரிடம் விவரிக்கலானுர்.

"நாங்கள் இரண்டாவதுமுறை காளத்திக்கு சென்ற பொழுது பெரிய திருமலைநம்பி, உள்ளங்கை கொணர்ந்த நாயனுர் காளத்திநாதன் அபிஷேகத்துக்கு நீர் கொண்டு போகும் குளத்தடியிலிருந்த ஒரு ஆலமரத்தடியில் தங்கினுர். நேரத்தை வீணுக்காமல் பெரிய திருமலைநம்பி எங்களுக்கு திவ்யப்பிரபந்த காலக்ஷேபம் சாதிக்கலானுர். அப்போது அபிஷேக ஜலம் கொண்டுபோக நாயனுர் குடமெடுத்துவந்தார். இம்முறை நம்பி காலக்ஷேபம் செய்வதை நிறுத்திக் கொள்ளவில்லை; நாயனுர் தூரத்தில் வரும்போதே பார்த்துவிட்டாராதலால் தம்மிடமிருந்த ஒரு ஓலை நறுக்கை எடுத்து அதில் ஆளவந்தாரின் சுலோகமொன்றை எழுதி நாயனுர் வரும்வழியில் போட்டு வைத்தார்.

வேகமாக நீர் மொள்ள வந்த நாயனுரும் அந்த ஓலையிடம் வந்ததும் ஒரு விநாடி நின்ருர். பிறகு குனிந்து ஓலையை எடுத்து அதிலிருந்த சுலோகத்தை வாசித்தார். பிறகு ஓலையை அந்த இடத்திலேயே போட்டு விட்டு குளத்தை நோக்கி நகர்ந்து விட்டார். குடத்தில் அபிஷேக

நீர் மொண்டு திரும்பி வந்த போது சிந்தனை வசப்பட்டிருந்தார். தீர்க்காலோசனையின் சாயை அவர் முகத்தில் விரவிக் கிடந்தது. ஓலையிருந்த இடத்தை அடைந்து அதை மீண்டும் எடுத்துப் படித்தார். பிறகு அந்த ஓலையுடன் பெரிய நம்பியிடம் வந்து "உங்கள் கையிலிருந்து நழுவி விட்ட பொருள் இதுவோ?" என்று கேட்டார் ஓலையைக் காட்டி.

பெரிய நம்பி மருமானை ஏறெடுத்துப்பார்த்தார் பிறகு புன்முறுவல் கொண்டு அமைதியுடன் பதில் சொன்னார். "மற்றவர்கள் பொருள் நழுவலாம். எங்கள் பொருள் நழுவும் பொருளல்ல" என்று.

கோவிந்தன் எனும் நாயனார் மாமனை நோக்கினார்.

"அது இடக்கட்டும். நீங்கள் எல்லோரும் ஏன் ஒரு வழியில் செல்கிறீர்கள்?" என்று வினவினார்.

"வழி நல்லதாயிருக்கிறது; தெளிவாயிருக்கிறது கலக்கமற்றதாயிருக்கிறது" என்றார் நம்பி.

மேலும் தொடர்ந்தது விவாதம். நாயனார் கேட்டார். "வழிகள் பலவுண்டோ?"

நம்பி : உண்டு. நல்ல பொக்கிஷத்தை உடையவன் நடக்கவேண்டிய வழி இதுதான்.

நாயனார் : நீங்கள் உங்கள் உறவினர்களை வழியனுப்ப வந்திர்களோ.

நம்பி -இல்லை; கறவைப் பசுக்கள் பிடிக்க வந்தோம்.

நாயனார் : நல்ல அனுஷ்டானத்திலிருப்பவர்களுக்கு பசுவின் பாததூளி புனிதமானதல்லவா?

நம்பி : அது தேடுமிடத்தைப் பொறுத்தது. இடம் பார்த்துத் தேடுவதில்தான் குறை நிறைகள் புண்யபாவங்கள் சகலமும் இருக்கின்றன.

நாயனூர் சிறிது சிந்தித்துவிட்டுக் கேட்டார். "குறுக்கு நெடுக்கானல் என்ன வித்தியாசம்?" என்று.

நம்பி : இயற்கைக்கும் செயற்கைக்கும் உள்ள வித்தியாசம்.

நாயனூர் : இது நவீன வாதமோ?

நம்பி : அல்ல; புராதனமான வாதம்.

நாயனூர் : இதற்குப் பூர்வ விசாரம் (முதல் ஆராய்ச்சி) ஏதும் கிடையாதோ?

நம்பி : ஆரம்பமுறைகளில் விவகாரம் இல்லை. எது பரத்வம் என்பதில்தான் விசாரம் எது ஸ்திரம் எது ஸ்திரமற்றது என்பதில்தான் விசாரத்துக்கு இடம்.

இதற்குமேல் நாயனூர் விவாதத்தில் இறங்கவில்லை. பெரியதிருமலை நம்பியை ஒருமுறை நோக்கிவிட்டு வேகமாக கோவிலை நோக்கி நடந்துவிட்டார்.

பெரியதிருமலை நம்பி நாயனூருடைய நடையைக் கவனித்தார். "இரண்டாவது வித்தையும் ஊன்றி ஜலமும் விட்டுவிட்டோம். இனி செடி முளைக்க வேண்டியதுதான்" என்று கூறிவிட்டு எங்களுடன் திருப்பதிக்குத் திரும்பினர்— என்று கூறி நிறுத்தினர் பிராம்மணர்.

"அடுத்து என்ன?" என்று ராமானுஜர் கேட்டார்.

"சிலநாட்கள் சென்றன. திடீரென ஒருநாள் பெரிய திருமலைநம்பி எங்களுடன் காளஹஸ்திக்குப் புறப்பட்டார். இம்முறை குளத்தண்டை சென்றுநில்லை. ஊருக்குப் புறம்பே யிருந்த ஒரு தோப்பில் தங்கினர். அங்கு நீராட்டத்தை முடித்துக்கொண்டு காலக்ஷேபம் ஸாதிக்கலானர். அவர் பாசுரங்களை அநுஸந்திக்க ஆரம்பித்த சில நிமிடங்களுக் கெல்லாம் உள்ளங்கை கொணர்ந்த நாயனூரும் பூசைக்குப் பூக்கொய்ய அந்த தோட்டத்திற்கு வந்து மரத்தில் ஏறி புஷ்பங்களைப் பறிக்கலானார். அதைப் பெரிய திருமலைநம்பி

யும் பார்த்திருக்கவேண்டும். அன்று "திண்ணன்வீடு" என்ற திருவாய்மொழியை எங்களுக்கு உபதேசம் செய்தார். முதல் பாசுரத்தைக் கேட்டதுமே நாயனார் நம்பியிருந்த இடத்தருகே இருந்த மரத்தில் ஏறி பூ பறிக்கலானார். அவர் காதிலும் திருவாய்மொழிப்பாசுரங்கள் ஏறவே பூவை அறையும் குறையுமாகப் பறிக்கலானார் நாயனார்.

கடைசியாக நம்பி தமது பிரபந்தபாணத்தைத் தொடுத்தார் :

தேவும் எப்பொருளும் படைக்க
பூவில் நான்முகனைப் படைத்த
தேவன் எம்பெருமானுக்கல்லால்
பூவும் பூசனையும் தருமே

என்று பாசுரத்தைஒதி விளக்கமும் சொல்லலானார். கேசவன் என்ற நாமம் பிறந்த காரணத்தையும் சொன்னார். 'க இதி ப்ரம்மணே நாம. ஈசோஹம் ஸர்வ தேஹினும், ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ. தஸ்மாத் கேசவநாமவான்" என்று ஈசுவரனும் சொல்லுகிறார். 'க : என்ற பிரம்மாவும் தேகம் படைத்தவர்களுக் கெல்லாம் ஈச்வரனை நானும் உன்னிட மிருந்து உண்டானதால் உனக்குக் கேசவன்' என்று பெயர் என்று சிவன் கூறியதாக விளக்கமும் சொன்னார்.

நம்பி மீண்டும் சொன்னார். அப்படிப்பட்ட எம்பெருமானுக்கல்லாமல் பூவும் பூசனையும் தகுமே? (வேறுயாருக் காவது பூவும் பூசனையும் தகுமோ?) என்று சாதித்தார் உணர்ச்சி பொங்க. அவருடைய உணர்ச்சி, மரத்தின் மேலேயிருந்த கோவிந்தனையும் கொள்ளை கொண்டிருக்க வேண்டும். "வேறுயாருக்கும் தகாது, தகாது, தகாது" என்று கூவிக்கொண்டு, மரத்திலிருந்து குதித்து பெரிய திருமலை நம்பியின் பாதங்களில் விழுந்தான். மாறிய மனத் திறுல கண்கள் நீரைப் பெருக்கி பெரியதிருமலை நம்பியின் பாதங்களை நனைத்தன.

மருமகனை வாரியணைத்த பெரிய திருமலை நம்பி "நம்மாழ்வாரின் பிரபந்த பாணத்திலிருந்து யார் தப்ப முடியும்?" என்று உள்ளுர வினவிக்கொண்டார்.

(தொடரும்)

(ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பாவனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீமத் பரமஹம்ஸ யதிராஜ ஜீயர்ஸ்வாமி ஸ்ரீ உ வே. K. A. மணவாளன், ஸ்ரீ உ வே. TAV வரதாச்சாரியார், ஸ்ரீ உ வே. M. A. வேங்கடகிருஷ்ணன் ஆகியோர் ஸ்வாமியைப் பற்றியும் அன்னாரது பற்பல கைங்கர்யங்களைப் பற்றியும் போற்றிப் புகழ்ந்தனர். ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீரங்கநாராயணஜீயர் ஸ்வாமி மதுரகவி அண்ணாவியார், வேளுக்கை ஆளரி தேவஸ்தான தர்மகர்த்தா முதலானோர் பாராட்டுமடல் வழங்கினர்.

மாலை நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் நகரத்தின் பிரமுகர்களும் வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் கலந்து கொண்டுபாராட்டிப் பேசினர். அத்துடன் விழா இனிது நிறைவுற்றது.

—P. T. விஜயராகவன் M.sc. B.L.A.,C.S

ஸ்ரீ உ வே P. B. அனந்தாசாரியர்ஸ்வாமி கீதாசார்யன் வெளியிடப்படுவதற்கு இரண்டு மாதங்கள் முன்னமேயே ஆயுள் சந்தா அளித்து நமது முதல் ஆயுள் சந்தாதார் ஆகும் பெருமை பெற்றவர். ஒருமுறை கீதாசார்யனில் வெளியிடுவதற்கான புகைப்படம் எடுப்பதற்காக காஞ்சி வேளுக்கை ஆளரி சன்னிதிக்குச் சென்றிருந்தோம். அப் போது அக்கோயில் மிகவும் சிதிலமடைந்திருப்பதைக்கண்ட P. B அனந்தாசாரியர் ஸ்வாமி, உடனடியாக ஜீர்ணோத்தா ரணம் செய்ய வேண்டுமென்று உறுதிபூண்டார். தாயார் சன்னிதியின மொத்த செலவுகளையும் தாமே ஏற்று சுமார் ரூ. 30,000 செலவில் ஜீர்ணோத்தாரணம் செய்து வைத்தார்.

இந்த விழாவிலும் தமக்கே உரிய உதாரகுணத்தை வெளிப் படுத்தியிருக்கிறார்கள் அவர். கீதாசார்யன் பதிப்பித்துவிடும் நாலாயிர திவ்யப்ரபந்தப்புத்தகத்திற்கு ரூ 5000 நன்கொடை வழங்குவதாக உறுதியளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

— ஆசிரியர்